JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

மலர் 13 | இதழ் 11 | ஜனவரி 2023 | ஆண்டு சந்தா ₹100

இயேசு என் அரணாய் இருக்கிறபடியினால்...



# தீங்கு அணுகுவதில்லை!

கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமான வாலிப உள்ளங்களுக்கு, இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் என் அன்பின் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

இயேசு கிறிஸ்து வாலிபர்களாகிய உங்களை அதிகமாக நேசிக்கிறார். ஆகையால் தான் உங்களை எழுப்புதலில் பயன்படுத்துவேன் என்று வாக்கு கொடுத்திருக்கிறார். அதன்படியே வாலிப சேனையை எழுப்பிக் கொண்டிருக்கிறார். Igniters ஆகிய நீங்கள் சென்று ஊழியம் செய்து ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதும் நீங்கள் அனைவரும் இணைந்து இலட்சக்கணக்கான மணி நேரங்கள் ஜெபித்து செயல்படுவதை பார்க்கும் போது என் இதயம் மிகவும் மகிழ்ந்து களி கூருகிறது. இயேசு கிறிஸ்துவும் மிகவும் மகிழ்ச்சி அடைகிறார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. 2022ல் செய்ததை விட இந்த வருடம் இன்னும் அதிகமாக ஜெபிக்கவும், ஆத்துமாக்களை ஆதாயம் செய்யவும் நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன். அது மட்டுமல்லாமல், ஜெபக்குழுவில் இணைந்து ஜெபிக்கிற வாலிபர்கள் தன்னார்வமாக வந்து இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியர்களோடு இணைந்து ஊழியம் செய்யும் தன்னார்வ ஊழியர்கள், தலைவர்கள் மற்றும் வாலிபர் உலகம் சந்தாதாரர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் எங்களது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்
மோகன் சி லாசரஸ்

HAPPY
NEW YEAR



Index

06 கர்த்தர் என் நம்பிக்கை...
12 தீங்கு அணுகுவதில்லை
18 பள்ளிக் கல்லூரிக் கூடுகை
24 ஜெபக் கையேடு
32 2022ம் ஆண்டின் அறுவடை

**ஆசிரியர்:** மோகன் சி. லாசரஸ் | **இணை ஆசிரியர்:** அவினாஷ் | **ஆசிரியர் குழு:** வயலா | ஜிஷ்யா | ரேச்சல் கிளாடிஸ் | ரவி | சுமா | கெத்சி கிளார்வின் | சதீஷ் | காலேப் | பெனிட்டா | ஜெயா | ஜாய்லின் ஜான்
**வடிவமைப்பு:** ஜாஷ்வா



## தலைவாசல்

# புதியப் பாதை

**அன்பான இளம் நெஞ்சங்களுக்கு! என் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**

புதிய ஆண்டில், புதியப் பாதைகளை நமக்கு திறக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். பல நேரங்களில் இந்த காரியம் எனக்கு வாய்க்கவில்லையே என்று நீங்கள் சோர்ந்து போய் இருக்கலாம். இந்த புதிய ஆண்டில், தேவன் உங்களுக்காகவே பல புதிய திட்டங்களைத் தந்து, புதிய வழிகளைத் திறந்து, உங்களை வெற்றியாய் நடக்கச் செய்வார்.

இஸ்ரவேல் மக்களுக்கு முன்பாக சிவந்த சமுத்திரம் பெருந்தடையாக இருந்த போதும், தேவன் அவர்களுக்கென்று ஒரு வழியை உண்டாக்கி எப்படி நடக்க செய்தாரோ, அப்படியே நீங்கள் அறியாத ஒரு பாதையை உங்களுக்காகவே உருவாக்கி வழி நடத்துவார். மேலும் உங்களை இத்தனை நாட்கள் அடிமைப்படுத்தின பாவங்கள், உங்களை சோர்ந்து போக பண்ணின சூழ்நிலைகள் உண்டு. ஆனால் இந்த வருடம் கர்த்தரே உங்களுக்காக யுத்தம் பண்ணி, உங்களை மனமடிவுண்டாக்கின எல்லா எதிரியின் அம்புகளை, அஸ்திரங்களை அழித்துப் போடுவார். இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காண மாட்டீர்கள், எனவே சோர்ந்து போக வேண்டாம். காரணம், கர்த்தர் தாமே உங்கள் முன் போவார்! அவர் தாமே உங்களை பின்பாகவும் வந்து காப்பார்.

உங்களுக்கு தேவன் கொடுத்திருக்கும் அதிகாரத்தை பயன்படுத்துங்கள், **“இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது”** (லூக்கா 10:19). சர்ப்பத்தின் குணாதிசயம் வஞ்சகமாய் செயல்படுவதும், தந்திரமான காரியங்களை செய்வதுமே. ஏவாளை வஞ்சித்து, அவர்கள் ஆசீர்வாதத்தை இழக்கப்பண்ணினவன் சாத்தான் (ஆதி. 3:1-16). ஆனால் இனி உங்கள் வாழ்க்கையில் அவனின் தந்திரம் செல்லாது. சத்துருவினுடைய எல்லா வஞ்சகத்தையும் நீங்கள் மிதிப்பீர்கள், அழிப்பீர்கள். உங்கள் பரிசுத்தத்திற்கும், அழைப்பிற்கும் விரோதமாய் அவன் போடும் சகல தீய எண்ணத்தையும் கர்த்தர் உங்கள் காலின் கீழ் போட்டு விட்டார்.

மேலும் சர்ப்பத்தின் இன்னொரு குணாதிசயம் உங்களை குற்றப்படுத்துவதும், உங்களை குற்றவாளியாகவே எல்லோர் முன்னால் பிரதிபலிப்பதுமே. மெலித்தா தீவிலே ஒரு விரியன் பாம்பு பவுலின் கையைக் கவ்விக் கொண்டது. உடனே அத்தீவார் பவுலைக் கொலைப்பாதகன் என்று யோசிக்க வழி வகுத்தது. ஆனால் பவுல் அந்தப் பூச்சியை உதறிப்போட்டான், பவுலின் கையை கவ்வும் போது அது விரியன் பாம்பு, ஆனால் பவுல் அந்தப் பூச்சியை உதறும்போது பூச்சியைப் போல் உதறிவிட்டான் (அப். 28:1-11). இதேபோல்தான் உங்களை ஏன் தொட்டோம் என்று சத்துரு சிந்திக்கிற அளவுக்கு அவனுடைய அனைத்து தந்திரங்களையும் நீங்கள் அதமாக்க வேண்டும். **இந்த புதிய ஆண்டில், புதிய வல்லமையோடும், புதிய தரிசனத்தோடும், புதிய கூர்மையான ஆயுதமாய் தேவன் கையில் செயல்பட உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள்.**

தேவனால் தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்டு தேசத்திலே எழும்பின **7 விதமான யௌவன சந்ததி நீங்கள் தான்,** (ஜெபிக்கிற தலைமுறை, யுத்த தலைமுறை, தீர்க்கதரிசன தலைமுறை, சுவிசேஷ தலைமுறை, பலவான்களின் தலைமுறை, காயம்கட்டுகிற தலைமுறை, விநோதமான காரியங்களையும் செய்யும் தலைமுறை) இந்த கடைசி நாட்களில் தேவனுடைய எழுப்புதல் பணியை தீவிரமாய் செய்துக் கொண்டிருக்கும் சேனையே, கர்த்தர் உங்களைக் கொண்டு செய்ய நினைக்கும் காரியத்தை எந்த சத்துருவின் கிரியையும் தடுக்காது.

இந்த ஆண்டு கர்த்தர் நமக்கு கொடுக்கும் வாக்குத்தத்தத்தை உறுதியாய் பற்றிக் கொள்வோம். “கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி, உன் சத்துருக்களை விலக்கினார்; இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார்; **இனித் தீங்கைக் காணாதிருப்பாய்**” (செப்பனியா 3:15).

**இந்த ஆண்டு நீங்கள் ஆத்துமாக்களை அறுவடை செய்யும் ஆண்டு.**

கிறிஸ்துவின் பணியில்
அவினாஷ்

# புத்தாண்டு தீர்மானங்கள்

அடுத்த ஆண்டு ஆரம்பிப்பதற்கு முன்பே எடுக்க வேண்டிய தீர்மானங்களை யோசித்தோ, எழுதியோ வைத்து விடுவார்கள். தீர்மானம் எடுப்பது தவறு அல்ல, ஆனால் அவற்றை செயல்படுத்த முயற்சியாவது எடுத்திருக்க வேண்டும். கடந்த ஆண்டில் எடுத்த தீர்மானங்களை நிறைவேற்றி முடித்தீர்களா? என்று ஒருவிசை திரும்பி பார்த்துவிட்டு, இந்த வருடம் எடுக்க வேண்டிய ஒருசில தீர்மானங்களை உங்களுக்காக சொல்கிறேன்.

### உடற்பயிற்சி

உடல் எடை அதிகரிப்பு என்பது இன்று பலருக்கும் இருக்கும் பிரச்சனையாக இருக்கிறது. உடல் எடையை கட்டுப்பாட்டில் வைத்திருக்க தினமும் உடற்பயிற்சி செய்ய தீர்மானியுங்கள்.

### உணவு

சத்தான உணவுகளை மட்டுமே சாப்பிட வேண்டும். குறிப்பாக ஹோட்டல் உணவுகளை தவிர்க்க தீர்மானியுங்கள்.

### சேமிப்பு

வாழ்க்கையில் இக்கட்டான சூழ்நிலைகளில் பெரிதும் உதவுவது சேமிப்பு. எனவே தேவையற்ற செலவுகளைக் குறைத்து, மாதந்தோறும் சிறிதளவு பணத்தை சேமிக்க தீர்மானியுங்கள்.

### படித்தல்

சமூக ஊடகங்களை பார்த்து நேரத்தையும், கண்களையும் வீணாக்காமல் உபயோகமான புத்தகங்களைப் படித்து அறிவை வளர்த்துக் கொள்ளத் தீர்மானியுங்கள்.

### கெட்டப் பழக்கம்

ஒருவரைப் பற்றி குறை கூறுவது, கோபப்படுவது முதல்... புகைபிடித்தல், மதுபழக்கம் என எந்த கெட்டப்பழக்கம் இருந்தாலும் அதை இந்த வருடத்தில் விட்டுவிட தீர்மானியுங்கள்.

### நல்லப் பழக்கங்கள்:

முடிந்தவரையில் பிறருக்கு உதவி செய்வது, அனைவரிடமும் நட்பு பாராட்டுவது, இன்முகத்துடன் இருப்பது போன்ற நல்ல பழக்கங்களை செய்வதற்கு இந்த ஆண்டில் தீர்மானியுங்கள்.





இந்த ஆண்டு எடுத்த தீர்மானங்களை
நிறைவேற்ற உங்களை வாழ்த்தி
ஆசீர்வதிக்கிறோம்.
*Happy New Year!!*

புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

கீழே வேதாகமத்தில் உள்ள நீதிமொழிகள் புத்தகத்திலிருந்து சில கேள்விகள் கேட்கப்பட்டுள்ளது. சரியான விடையைக் கண்டறிந்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களை விடைகளால் நிரப்பி அனுப்பும்.

## இடமிருந்து வலம்

1. இவனுடைய வீட்டில் அதிக பொக்கிஷமுண்டு. இவனுடைய வழியோ ராஜபாதை, இவன் யார்?
5. புத்தியீனத்தைச் சுதந்தரிக்கிறார்கள். எந்த வார்த்தையும் நம்புவார்கள், யார் இவர்?
7. இவர்கள் பாவத்தைக்குறித்துப் பரியாசம்பண்ணுகிறார்கள். இவர்களின் மதியீனம் மூடத்தனமே, இவர்கள் யார்?
8. கர்த்தரிடத்தில் தயை பெறுவான். தன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்குச் சுதந்தரம் வைத்துப்போகிறான், இவன் யார்?
9. இவர்களுடைய வாயோ தீமைகளைக் கொப்பளிக்கும். இவர்களுடைய நினைவுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள், இவர்கள் யார்?

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 10 | | | | | |
| | | | 2 | | | | | | |
| 8 | | | | | | | | | |
| | | 1 | | | 6 | | 4 | | |
| | 5 | | | | | | | | |
| 9 | | | | | | | | | |
| | | | | | | 3 | | | |
| | | 7 | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

## மேலிருந்து கீழ்

6. இவர்களுடைய பலி கர்த்தருக்கு அருவருப்பானது. இவர்களுடைய வழி கர்த்தருக்கு அருவருப்பானது. இவர் யார்?
3. தன் நடையின்மேல் கவனமாயிருக்கிறான். அறிவினால் முடிசூட்டப்படுகிறது. இவர் யார்?
4. மதிகேட்டைச் செய்வான். புத்தியீனத்தை விளங்கப்பண்ணுவான், இவன் யார்?
6. இவர்களின் நாவு அறிவை உபயோகப்படுத்தும். இவர்களின் உதடுகள் அறிவை இறைக்கும், இவர்கள் யார்?
10. பிசினித்தனமில்லாமல் கொடுப்பான், நியாயந்தீர்ப்பது இவனுக்குச் சந்தோஷம், இவன் யார்?

### கடந்த மாத விடைகள்

1. யோவான்ஸ்நானன் (மத். 3:1,2)
இயேசு (மத். 4:17)
2. யாக்கோபு (ஆதி. 37:33,34)
தாவீது (2 சாமு. 13:37)
3. ராஜஸ்திரீயாகிய எஸ்தர் (எஸ்தர் 5:2)
ஆமான் (எஸ்தர் 6:5)
4. யோசேப்பு தன் சகோதரரை நோக்கி (ஆதி. 45:4)
எலியா சகல ஜனங்களையும் நோக்கி (1 இராஜா. 18:30)
5. கிதியோன் (நியா. 8:24)
இயேசு (மத். 21:24)
6. நேபுகாத்நேச்சார் (தானி. 4:4,5)
தானியேல் (தானி. 7:15)
7. எலியா (1 இராஜா. 18:5,7)
பேதுரு (அப். 12:7)
8. அப்போஸ்தலர்கள் (அப். 5:18,19)
பேதுரு (அப். 12:7-10)
9. சகரியா (லூக்கா 1:11,12)




Jesus Redeems Youth Ministries,
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535.
eMail: youth@jesusredeems.org

# கர்த்தர் என் நம்பிக்கை...



WORSHIP LEADER PASTOR Benz

சாட்சி தொகுப்பு: ஷிஷ்யா

**இயேசுவை அறியாதக் குடும்பத்திலிருந்து இரட்சிக்கப்பட்டு இன்று பல சபைகளுக்குப் போதகராகவும் மற்றும் ஆராதனை வீரராகவும், அநேக ஆயிரங்களை கர்த்தரண்டையில் நடத்தி வரும் போதகர் பென்ஸ் அவர்களின் வாழ்க்கையில் நடந்த மாற்றங்களை அவரிடமே கேட்டு தெரிந்து கொள்ளலாம், வாங்க...**

**உங்களது குடும்பம் மற்றும் சிறு வயதுப் பற்றி சொல்லுங்களேன்?**

நான் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அருமனை என்ற பகுதியில், கிறிஸ்துவை அறியாதக் குடும்பத்தில் பிறந்தேன். எனக்கு 2 அண்ணன், 2 அக்காவும் இருக்கிறார்கள். என் தகப்பனார் விவசாயம் செய்து வந்தார்கள். என் தகப்பனாருக்கு மது அருந்தும் பழக்கம் இருந்ததால், குடித்து விட்டு தான் வீட்டிற்கு வருவார். ஒரு நாள் கூட குடிக்காமல் வீட்டிற்கு வந்ததே இல்லை. எனது தகப்பனாரின் குடிப்பழக்கத்தினால் எங்களது குடும்பம் மிகவும் வறுமையால் வாடியது. எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது என்று, சிறு வயதிலேயே என் மனதில் மிகுந்த பாரம் இருந்தது. எப்படியாவது என் அப்பாவின் குடிப்பழக்கத்தை மாற்ற வேண்டுமென்று நிறைய முயற்சிகள் எடுத்தும், எதுவும் வாய்க்கவில்லை. இந்த சூழ்நிலையில் எங்களது பக்கத்து வீட்டில் உள்ள ஒரு பாட்டி மூலமாக எனது ஒரு அக்கா Sunday Schoolக்கு போக ஆரம்பித்தார்கள். ஒருநாள் என்னையும் Sunday Schoolக்கு அழைத்துச் சென்றார்கள். அப்படி ஆலயத்திற்கு போக ஆரம்பித்தேன்.



**சரி, பாட்டி அழைத்ததால் சென்றீர்கள்... இயேசுவின் மேல் எப்படி நம்பிக்கை வந்தது?**

நான் 7ஆம் வகுப்பு படிக்கும் போது ஆலயத்தில், என் அப்பாவின் குடிப்பழக்கத்தை மாற்றினால் நீர் உண்மையான தெய்வமாக உங்களை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று ஒரு சிறு ஜெபம் செய்து விட்டு வீட்டிற்கு வந்தேன். அன்றைக்கு என் தகப்பனார் வீட்டிற்கு வரவேயில்லை. மது கடையில் நடந்த பிரச்சனையினால் காவல்துறையினர் அழைத்துச் சென்று 8 நாட்களுக்கு பிறகு வீட்டிற்கு அனுப்பினார்கள். வீட்டிற்கு வந்தவுடன் எங்களை கூப்பிட்டு ''நான் இன்றிலிருந்து மதுபானம் குடிக்க மாட்டேன்'' என்று சொன்னார்கள். இதைக் கேட்டவுடன் நான் செய்த சிறு ஜெபம் தான் எனக்கு ஞாபகம் வந்தது. அன்றிலிருந்து இன்று வரைக்கும் என் அப்பா குடிக்கிறதே கிடையாது. எனவே எனக்கு இயேசுவின் மேல் ஒரு தீராத நம்பிக்கை உண்டானது.

**சூப்பர்... உங்கள் ஜெபம் கேட்கப்பட்டது... தொடர்ந்து சபைக்கு போக ஆரம்பித்தீர்களா? இயேசுவை ஏற்றுக் கொண்டீர்களா?**

ஆம், தொடர்ந்து சபைக்கு போக ஆரம்பித்தேன். எங்களது சபை போதகர் மற்றும் Sunday School Teacher என்னை உற்சாகப்படுத்தி பாடல்களைப் பாட வைத்து, நிறைய ஆவிக்குரிய காரியங்களைக் கற்றுக் கொடுத்தார்கள். நானும் வாஞ்சையோடு கற்றுக்கொண்டேன். தொடர்ந்து சபைக்குப் போக ஆரம்பித்தேன். கொஞ்சம் கொஞ்சமாக இயேசுவின் அன்பை உணர ஆரம்பித்தேன். இயேசுவை என் சொந்த இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டேன்.

**சரி... வாஞ்சையோடு சபைக்கு சென்றீர்கள்... உங்களுடைய பள்ளிப்படிப்பைப் பற்றி சொல்லுங்களேன்?**



நான் பத்தாம் வகுப்பில் 155 மதிப்பெண்கள் எடுத்து 3 பாடங்களில் தோல்வியுற்றேன். எப்படியாவது பத்தாம் வகுப்பு வெற்றி பெற வேண்டுமென்று எனது பாஸ்டர் ஒரு டுட்டோரியலில் சேர்த்து விட்டார்கள். எனக்கு மூன்று நாட்கள் ஒரு ஆசிரியை கணக்கு வகுப்பு எடுத்தார்கள். அந்த ஆசிரியை நிறைய முயற்சிகள் எடுத்து சொல்லிக் கொடுத்ததும் எனக்கு புரியவே இல்லை. எனவே பாஸ்டரை அழைத்து, இவன் 10ம் வகுப்பு வெற்றி பெறுவது நடக்கிற காரியம் அல்ல என்று சொல்லி டுட்டோரியலில் இருந்து அனுப்பி வைத்தார்கள். பாஸ்டர் என்னை ஒரு பிரிண்டிங் பிரஸ்ஸில் வேலைக்கு சேர்த்து, கிட்டத்தட்ட 9 மாதங்கள் அங்கு வேலைப் பார்த்தேன்.

**சரி... பிரிண்டிங் பிரஸ்ஸில் வேலை பார்த்தீர்கள்... தொடர்ந்து படித்தீர்களா?**



சொல்கிறேன்... பிரிண்டிங் பிரஸ்ஸில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் போது, எனது போதகர் Church of God வேதாகமக் கல்லூரியில் படிப்பதற்காக படிவம் நிரப்பி அனுப்பி வைத்தார். எனக்கு ஒரே சந்தோஷம். ஆனால் என் வீட்டில் என்னை நம்பி நிறைய கடன் வாங்கி வைத்திருந்தார்கள். ஆகையால் மிகப்பெரிய எதிர்ப்பு ஆரம்பித்தது, எனக்கு சரியான சாப்பாடு கிடைக்காமல் பெரிய பிரச்சனைகளை சந்தித்தேன். ஆண்டவர் மீதுள்ள அன்பினால் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு, வேதாகமக் கல்லூரிக்கு சென்றேன். ஒரு பழைய சட்டையும், 2 பேண்ட்டும் ஒரு பாஸ்டர் கொடுத்தார். அவற்றை எடுத்துக் கொண்டு இனி சாப்பாட்டுக்கு பஞ்சமே இல்லை, எந்த குறையும் இல்லை என்ற சந்தோஷத்தோடு சென்றேன். நான் கிராமத்தில் வளர்ந்ததால் நகரத்தில் போய் படிக்க வேண்டுமென்று மிகவும் ஆவலுடன் சென்றேன். பல பாடுகள் மத்தியில் தான் படிப்பையும் முடித்தேன்.

**பாடுகள் மத்தியில் கல்லூரிப் படிப்பை முடித்தீர்கள்... அப்படி என்னென்ன பாடுகளை அனுபவித்தீர்கள்?**

மாதந்தோறும் பாஸ்டர் என்னைப் பார்க்க வரும் போது 100 ரூபாய் கொடுப்பார்கள். அதில் என்னுடைய அத்தியாவசியப் பொருட்கள் (சோப்பு, எண்ணெய் etc.) வாங்குவேன். ஒரு மாதம் என் நண்பனின் பாட்டி இறந்ததால் 100 ரூபாயை அவர் வாங்கிவிட்டர். எனக்கு சோப்பு, எண்ணெய், Paste காலியாகி விட்டது. எதுவுமே வாங்க என்னிடம் காசு இல்லை. எனவே மற்ற மாணவர்கள் குளித்து முடித்த பிறகு மீதி இருக்கும் சோப்பை நான் எடுத்து பயன்படுத்துவேன். துணி துவைப்பதற்கும் அவர்கள் வேண்டாம் என்று போட்டிருக்கும் சோப்பை சேர்த்து வைத்து துணி துவைப்பேன். ''ஆண்டவரே ஏன் எனக்கு இந்த நிலமை'' என்று கேள்வி நான் கேட்டதே இல்லை. ஒரு வாரத்திற்கு ஒரு சட்டை, பேண்ட் என்று குறைத்துக் கொண்டேன். ஒரு வாரம் எல்லா மாணவர்களிடமும் Paste வாங்கி சமாளித்து விட்டேன். ஒருநாள் பக்கத்து அறையில் இருந்த சகோதரரிடம் Paste கேட்டதும், அவர் என்னை வாய்க்கு வந்தபடி திட்டி அனுப்பினார். என்னால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் கலக்கத்துடன் அறையில் வந்து, ''இயேசப்பா ஊழியத்திற்கு அழைப்பு இருக்கிறதா இல்லையா? இதற்கு நான் தகுதியுள்ளவனா'' என்று எனக்கு எதுவுமே தெரியாது. ஆனால் நான் உண்மையான ஊழியக்காரன் என்று நீங்கள் அங்கீகரித்துக் கொண்டீர்களானால், இன்றிலிருந்து நான் சாகிற வரைக்கும் யாரிடமும் எந்த பொருளுக்கும் கையேந்தி நிற்கக் கூடாது என்று ஜெபித்தேன்.

ஜெபித்து முடித்தவுடன் வரவேற்பறைக்கு வரச் சொல்லி எனது கையில் 50 ரூபாய் கொடுத்தார்கள். என்ன காசு என்று கேட்ட போது, கணபதியில் பாஸ்டர் ஜெபராஜ் அவர்கள் ஆலயத்தில் போய் சாட்சி சொன்னீர்களே, அந்த ஆலயத்தில் உள்ள ஒரு விசுவாசி தாய் உங்களுக்கு 50 ரூபாய் காணிக்கை கொடுத்துச் சென்றார்கள் என்று சொன்னார். எனக்கு மிகுந்த சந்தோஷம். அந்த சந்தோஷத்தோடு என் அறைக்கு போகும் போது, எனக்கு சீனியர் சகோதரர் எபினேசர் அவர்களுக்கு திருமணம் ஒழுங்காகி விட்டதால் படிப்பை நிறுத்திவிட்டு ஊருக்குச் சென்றார். எனவே அவரிடம் இருந்த Paste மற்றும் பல பொருட்கள் அடங்கிய ஒரு அட்டைப் பெட்டியை என் கையில் கொடுத்தார். அந்த Paste நான் மூன்று வருடம் பயன்படுத்தினேன். ஆண்டவர் என்னை முன் குறித்திருக்கிறார் என்று முடிவு பண்ணி தொடர்ந்து விசுவாசத்தில் வளர ஆரம்பித்தேன். அநேக போராட்டங்களோடு 3 வருட படிப்பை படித்து பட்டம் வாங்கினேன்.

**சூப்பர்... படித்து பட்டம் வாங்கினீர்கள்... சரி, வேதாகமக் கல்லூரி படித்து முடித்தவுடன் போதகர் பணியைத் தொடர்ந்தீர்களா? எப்போது போதகரானீர்கள்?**

இல்லை, ஒரு வருடம் நான் படித்த வேதாகமக் கல்லூரியில் வார்டனாகப் பணிபுரிந்தேன். ஒரு வருடத்திற்கு பிறகு சென்னை மாதவரத்தில் உள்ள Church of God ஆலயத்தில் உதவி போதகராக நியமித்தார்கள். ஞாயிற்றுக்கிழமை மட்டும் தான் எனக்கு ஊழியம். மற்ற நாட்களில் ஜெபம் இருந்தால் நடத்த வேண்டும். கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் நான் மிகவும் சோம்பேறியாகவே இருந்தேன். அதனால் வேறு சபைக்கு மாறுதல் கிடைக்க வேண்டுமென்று ஜெபித்தேன். 3 மாதத்திற்குப் பிறகு திருச்சியில் உள்ள ஒரு சபைக்கு மாறுதல் கிடைத்தது. அங்கு நான் தனிமையில் விடப்பட்டு, மனதளவில் (Psychological) பாதிக்கப்பட்டேன்.



அதோடு மஞ்சள் காமாலை முற்றிப்போய் ஊருக்குச் சென்றேன். நான் பல இடங்களுக்கு சென்று சிகிச்சை எடுத்தும், மஞ்சள் காமாலையிலிருந்து விடுதலை கிடைக்கவில்லை. அந்த நேரம் Church of God ஸ்தாபனத்திலிருந்து ஒரு தேர்வு எழுத வேண்டுமென்று சொல்லி கடிதம் வந்தது. அதைப் பார்த்தவுடன் எப்படியாவது எழுத வேண்டுமென்று கோவை வந்து தேர்வை எழுதி முடித்து விட்டு, உடல்நிலை வேறு சரியில்லை எங்கு போவது? என்ன செய்வது? என்று தெரியாமல், இயேசுவே நான் என்ன செய்வது என்று பாரத்தோடு மனதில் ஜெபித்தேன். அப்போது, நான் பைபிள் கல்லூரி படிக்கும்போது கோவையில் உள்ள ஒரு தாயார் விபத்தில் பாதிக்கப்பட்ட போது அவர்களை அன்போடு விசாரிப்பேன். அதனால் என்னை அவர்களுக்கு தெரியும். அந்த தாயார் எதிர்பாராத விதமாக அங்கு வந்தார்கள். என் நிலையைப் பார்த்து, அவர்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு நான் 7 நாட்கள் படுத்தப்படுக்கையாக இருந்தேன். 7வது நாள், என்னையே நான் பெலப்படுத்திக் கொண்டு திருச்சிக்குக் கிளம்பினேன். கைத்தாங்கலாய் பேருந்திலிருந்து இறங்கி என்னால் ஒரு அடி எடுத்து வைக்க முடியவில்லை. அப்படியே வானத்தைப் பார்த்து ''ஆண்டவரே என்னை கைவிட்டீர்களா'' என்று கேட்டுக் கொண்டே, எப்படியோ திருச்சியில் உள்ள சபைக்கு வந்து சேர்ந்தேன். என் நிலையைப் பார்த்த மூப்பர்கள், விசுவாசிகள் எப்போது உங்களுக்கு சுகம் ஆகுதோ அப்போது நீங்கள் வந்தால் போதும் என்று சொல்லி என்னை ஊருக்கு அனுப்பி வைத்தார்கள். எனக்கு ஊருக்குப் போவதற்கு விருப்பம் இல்லாமல் மறுபடியும் கோவையில் உள்ள அந்தத் தாயாரின் வீட்டிற்கேச் சென்றேன்.

இந்த தாயார் ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு ஆலயத்துக்கு அழைத்துச் செல்வார்கள். மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சையும் கொடுத்தார்கள். தினமும் மாத்திரையும் போட்டு வந்தேன். 9 மாதங்கள் படுத்தப்படுக்கையில் இருக்கும் போது, நான் ஊழியம் செய்ய வேண்டு மென்று ஒவ்வொரு நாளும் கண்ணீரோடு ஜெபிப்பேன். ஒன்பது மாதத்திற்கு பின்பு கடைசியாக ஒரு டெஸ்ட் எடுத்து பார்க்க வேண்டு மென்று சொல்லி டெஸ்ட் எடுத்தார்கள். 3 நாட்களுக்கு பின்பு ரிசல்ட் வாங்க போகும் போது பயந்துகொண்டே சென்றோம். ஆச்சரியம்! எல்லாமே நார்மலாக இருக்கிறது, இனி மாத்திரை சாப்பிட வேண்டாம் என்று சொன்னார்கள். எனக்குள் உற்சாகமும், புது தெம்பும் வர ஆரம்பித்தது.

**இவ்வளவுப் பாடுகளை அனுபவித்த நீங்கள்... திரும்பவும் ஊழியம் செய்ய ஆரம்பித்தீர்களா?**

ஆம், என்னைக் கவனித்த அந்தத் தாயார் ரத்தினபுரியில் ஒரு வீட்டில் ஆலயம் ஆரம்பிக்கலாமா என்று கேட்டார்கள். ஸ்தாபனத்தோடு தொடர்பு கொண்டு கேட்ட போது, ஆரம்பிக்க சொன்னார்கள். உடனே ஆராதனையை நடத்த ஆரம்பித்தோம். ஊழியம் ஆரம்பித்தவுடன் எனக்குள் இருந்த வியாதி முற்றிலும் மறைந்து போனது. 3 மாதங்கள்

அந்த வீட்டில் வைத்து ஆராதனை நடத்திக் கொண்டிருந்தேன். 5 பேர் 6 பேர் வந்துக் கொண்டிருந்தார்கள். நான் தினமும் வீட்டின் மொட்டை மாடியில் போய் ஜெபிக்கும் போது, பக்கத்தில் ஒரு சின்ன இடம் காலியாக இருப்பதைப் பார்த்து ''இயேசப்பா இந்த இடத்தில் ஆலயம் கட்ட வேண்டும்'' என்று தினமும் அந்த இடத்திற்கு நேராகக் கையை நீட்டி ஜெபிப்பேன். தீடிரென ஒரு நாள் ஒரு பணக்கார சகோதரன் அந்த ஆராதனையில் கலந்து கொண்டார். அன்றைக்கு நான் பேசின செய்தி அவரை தொட்டது. ஆலயம் கட்டுவதற்கு 25,000 ரூபாய் கொடுக்கிறேன் என்று சொல்லி அடுத்த நாள் 10,000 ரூபாய் கொடுத்து விட்டு சென்றார். உடனே வேலை ஆரம்பித்து கட்டிடம் கட்டி மேல் வரை கட்டி முடிக்கப்பட்டது. அதற்கு மேல் கட்ட பணமில்லாமல் அப்படியே வேலை ஸ்தம்பித்து நின்றது. ஒரு நாள் ஆலயம் கட்டப்படாமல் இருக்கிறதே என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டு போகும் போது, கட்டின ஆலயத்தில் துணி காய போட்டிருந்தார்கள்.



''ஆண்டவரே, என்ன தரிசனத்தோடு இதை கட்டினோம், துணி காய வைத்திருக்கிறார்களே'' என்று மன வேதனையுடன் இருக்கும் போது ''கலங்காதே மகனே, கலங்காதே மகளே கன்மலையாம் கிறிஸ்து கைவிடவே மாட்டார், கைவிடவே மாட்டார்...'' என்ற பாடலை காலை 9:30 மணிக்கு C.D. Player-ல் போட்டு ஓடவிட்டு நான் முழங்காலில் நின்று, பாடலைப் பாடி ஜெபம் செய்துக் கொண்டிருந்தேன். மாலை 4 மணி போல கதவு தட்டும் சத்தம் கேட்டு திறந்து, பார்த்தால் ஆலயத்திற்கு வரும் ஒரு தாயாரோடு இஞ்சினியர் ஒருவர் வந்திருந்தார். பாதியில் நிறுத்தி வைக்கப்பட்ட ஆலயத்தை போய் பார்த்து விட்டு ''பாஸ்டர் இனிமேல் என்னென்ன வேலை இருக்கிறதோ, எல்லாவற்றையும் நானே முடித்துக் கொடுக்கிறேன்'' என்று சொல்லி, அடுத்த நாளிலிருந்து வேலைக்கு ஆட்களை வைத்து 10 நாட்களுக்குள் எல்லா வேலையும் முடிந்தது. பல மாதங்கள் சந்தோஷமாக ஆராதனை நடைபெற்றுக் கொண்டிருந்தது.

**அந்த சத்தம் ஒய்ந்து போகும், நம் சத்தம் என்றைக்குமே ஒயாது**

**சூப்பர்... சபை கட்டப்பட்டது... சபையில் எந்த பிரச்சனையும் இல்லாமல் ஆராதனை நடைபெற்றதா?**

இல்லை, கொஞ்ச நாட்களிலேயே சத்தம் வருகிறது, உடனே காலி பண்ண வேண்டுமென்று பக்கத்தில் உள்ளவர்கள் ஆராதனை ஆரம்பிக்கும் போது ஆலயத்துக்கு முன்பு பெரிய Speaker கொண்டு வந்து சத்தமாக பாட்டு போடுவார்கள். ஆலயத்தில் Micset இல்லாததால் நான் பேசுவது எதுவுமே கேட்காது. 2½ மணி நேரம் மைக் இல்லாமல் ஆராதனை நடத்துவேன். அந்த பாட்டு சத்தம் தான் கேட்கும். ஆனால் எல்லா உபவாச ஜெபத்திலும் சொல்லுவேன், ''அந்த சத்தம் ஓய்ந்து போகும், நம் சத்தம் என்றைக்குமே ஓயாது'' என்று திரும்ப திரும்ப சொல்லி ஜெபிப்போம். 3 வாரங்களுக்கு பின்பு அவர்கள் பாட்டு போடுவதை நிறுத்தி விட்டார்கள்.

**சரி, பாஸ்டர் அந்த பிரச்சனை தான் முடிந்து விட்டதே? அதன் பின்பு எப்படி சபை ஊழியம் சென்றது?**

இந்த பிரச்சனை முடிந்தது. ஆனால் வேறு பிரச்சனை ஆரம்பித்தது. அந்த வீட்டை கொடுத்த குடும்பத்துக்கு எதிர்பாராத விதமாக கடன் வந்ததால், வீட்டை விற்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் அந்த வீட்டை விற்று விட்டார்கள். நாங்கள் இப்போது அந்த இடத்தை காலி பண்ண வேண்டும். இடம் பார்த்து இடமே கிடைக்காமல் ஒரு மாட்டு கொட்டகையில் கிட்டத்தட்ட ஒன்றரை வருடம் ஆராதனையை நடத்தினோம். சுமார் 150 பேர் வர ஆரம்பித்தார்கள். அங்கும் சில பிரச்சனைகளால் House Owner 3 மாதத்திற்குள் காலி பண்ண வேண்டுமென்று சொன்னார். என்ன செய்வதென்றே தெரியவில்லை.





ஒவ்வொரு வாரமும் பிரச்சனை மேல் பிரச்சனை வந்து போலீஸ் கேஸ் வரைக்கும் போனது. ஆகையால் அந்த சபையும் காலி பண்ண வேண்டியதாயிற்று.

**கேட்கவே கஷ்டமாக இருக்கிறது? சரி பாஸ்டர் அதன் பின்பு எங்கு ஆலயத்தை ஸ்தாபித்தீர்கள்?**

எங்கு போவதென்று தெரியவில்லை, 3 மாதம் எந்த இடமும் கிடைக்கவில்லை. நான் முழங்காலில் நின்று வாக்குத்தத்தங்களை அறிக்கை செய்து ஜெபித்துக் கொண்டிருக்கும் போது, ஒருவர் வந்து உங்களுக்கு ஆலயத்துக்கு இடம் கொடுக்கிறேன் என்று சொன்னார். அங்கு போய் பார்த்தால் பெரிய இடம், ஒரே சந்தோஷம் அது தான் இப்போது சபை ஆராதனை நடைபெற்று கொண்டிருக்கும் இடம். இதிலும் நிறைய பிரச்சனைகள் வந்தது. ஆனாலும் கர்த்தர் கடந்த 15 வருடங்களாக நடத்தி வருகிறார். அதுமட்டுமல்லாமல் 6 கிளை சபைகள் ஆரம்பிக்க தேவன் கிருபை செய்தார். இன்றைக்கு 1000க்கும் மேற்பட்ட விசுவாசிகள் இருக்கிறார்கள். ஆனால் ஒரு ஆராதனையில் 5000 பேர் வர வேண்டுமென்பதே என்னுடைய வாஞ்சையும் ஆசையுமாக இருக்கிறது. தேவன் நிறைய தரிசனத்தை கொடுத்திருக்கிறார். தொடர்ந்து அதற்காக ஜெபித்து வருகிறேன்.

**உங்களுடைய திருமணம் பற்றிச் சொல்லுங்களேன்?**

எனக்கு ஏற்ற துணை வேண்டுமென்று ஜெபிக்க ஆரம்பித்தேன். கர்த்தர் என் ஜெபத்தைக் கேட்டு நல்ல ஒரு ஊழியக்கார குடும்பத்தில் இருந்து நன்றாக ஜெபிக்கிற ஆண்டவருக்காக வைராக்கியமாக ஊழியம் செய்யும் மகளை தேவன் எனக்கு ஏற்றத் துணையாக கொடுத்து, 2008ஆம் ஆண்டு திருமணத்தையும் நடத்தி வைத்தார். என் மனைவி நன்றாக பாடுவார்கள், ஆராதனை நடத்துவார்கள். ஊழியத்தில் எனக்கு எல்லாவிதத்திலும் உதவியாக இருக்கிறார்கள். எங்களுக்கு 2 ஆண் பிள்ளைகளையும் கொடுத்து அவர்களையும் தேவன் பயன்படுத்தி வருகிறார்.



**வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

யாருக்கும் வேண்டாதவனாக, 10ம் வகுப்பில் 3 பாடம் தோல்வியுற்று, எல்லாராலும் புறக்கணிக்கப்பட்ட என்னை ஆயிரக்கணக்கான மக்களுக்கு பிரயோஜனமுள்ள பாத்திரமாக மாற்ற முடியுமானால், எந்த சூழ்நிலையாக இருந்தாலும் கர்த்தரால் உங்களையும் மாற்ற முடியும். அதற்கு நீங்கள் பாடுகள் அனுபவிக்க வேண்டும். கர்த்தரின் சித்தத்திற்கும் ஒப்புக்கொடுத்து ஜெபிக்க வேண்டும். எவரையும் மேன்மைபடுத்தவும், பெலப்படுத்தவும் கர்த்தருடைய கரத்தினால் ஆகும் என்று வேதத்தில் சொல்லியிருக்கிறது. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி கர்த்தர் பைத்தியமான உங்களையும் என்னையும் தான் தெரிந்துகொண்டார். ஆகவே பாடுகள், பிரச்சனைகளைப் பார்த்து ஓடிவிடாமல் அந்த பிரச்சனைக்காக எழுந்து நின்று போராடி ஜெயிக்க வேண்டும். அப்போது தான் தேவன் அடுத்தடுத்து பெரிய காரியங்களை உங்களைக் கொண்டு செய்ய முடியும்.

**அன்பான வாலிபர்களே! எத்தனையோ போராட்டங்கள், பிரச்சனைகள், வியாதிகள் தொடர்ந்து வந்தும் தேவன் மேல் உள்ள அன்பினால் எல்லாவற்றையும் மேற்கொண்டு இன்று ஆயிரக்கணக்கான ஆத்துமாக்களை ஆதாயம் செய்து கொண்டிருக்கிறார். அதுமட்டு மல்லாமல், அரசு அலுவலர்கள் மத்தியில், போதகர்கள் மத்தியில், ஆசிரியர்கள் மத்தியில், மருத்துவமனைகளில் கூடுகைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கவும் தேவன் பயன்படுத்தி வருகிறார். இந்த இளம் ஊழியர் பென்ஸ் போன்று, இந்த எழுப்புதலின் நாட்களில் வைராக்கியமுள்ள வாலிபர்களாக நீங்களும் எழும்புவீர்களா? ●**

# மவுண்ட் சினாய்



## வாலிபர்களுக்கான ஒருநாள் உபவாச ஜெபம்

ஒவ்வொரு வருடமும் தீபாவளி தினத்தன்று வாலிபர்களுக்கென்று ஒருநாள் உபவாச ஜெபம் (Mt. Sinai) நடத்த தேவன் கிருபை செய்து வருகிறார். 2022ம் வருடமும் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி என 6 இடங்களில், 3418 வாலிபர்கள் கலந்து கொண்டு தேசத்திற்காக மன்றாடி ஜெபித்தார்கள். இக்கூடுகையின் மூலம் அநேகர் இயேசுவைப் போல ஜெபிக்க கற்றுக் கொண்டு தங்களுடைய பகுதிகளில், கல்லூரிகளில், பள்ளிகளில் ஜெபக்குழுக்கள் ஆரம்பித்து ஜெபித்து வருகிறார்கள். அன்றைய தினம் மட்டும் சுமார் 6836 மணி நேரங்கள் ஜெபிக்க தேவன் கிருபை செய்தார். ஒரு லட்சம் கைப்பிரதிகள் கொடுக்கப்பட்டு அவர்களின் பகுதிகளில் சுவிசேஷம் அறிவிக்க உற்சாகப்படுத்தி அனுப்பப்பட்டனர்.

குறிப்பு: "ஒரு வாலிபர் கூட்டம் ஜெப சேனையாய் எழும்பி, தேசத்தை ஜெபத்தால் மூடிட" கர்த்தருக்கு சித்தமானால் வருகிற 2023ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் 38 மாவட்டங்கள் மற்றும் ஆந்திரா, பாண்டிச்சேரி என 40 இடங்களில் மவுண்ட் சினாய் ஜெபம் நடத்த ஜெபத்தோடு செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம்.



செய்தி : மோகன் சி லாசரஸ்




# தீங்கு அணுகுவதில்லை!

தேவனாகிய கர்த்தர் இன்றைக்கு உங்களைப் பார்த்து, என் மகனே(ளே), கலங்காதே **இனி தீங்கைக் காணாதிருப்பாய்** (செப்பனியா 3:15) என்று வாக்குக் கொடுக்கிறார். கடந்த காலங்களில் நம்முடைய தேசம் கொள்ளை நோயினால், பொருளாதார பாதிப்பினால், இயற்கை பேரழிவுகளினால், சமுதாயத்தில் ஏற்பட்ட பலவிதமான காரியங்களினால் உண்டான தீங்கு என்று, அநேக தீங்குகளை சந்தித்தது. அந்த தீங்குகளினால் நாம் எல்லோருமே பாதிக்கப்பட்டோம். அதன் நிமித்தமாக நீங்களும் உங்களுடைய வேலையில், படிப்பில், ஊழியத்தில் சில தீங்குகளை சந்தித்து இருக்கலாம். ஆனால் கர்த்தர் கிருபையாக அதை எல்லாம் தாண்டி உங்களை நடத்திக் கொண்டு வருகிறார். ஆனால் இந்த தீங்கு எவ்வளவு காலம் என்று கூட நீங்கள் நினைக்கலாம்! தேவனாகிய கர்த்தர், கலங்காதே, இனி தீங்கை காணாதிருப்பாய் என்று உங்களுக்கு வாக்கு கொடுக்கிறார்.



ஏன் இப்படிப்பட்டதான தீங்குகள் காணப்படுகிறது என்றால், இந்த தீங்குகளுக்குப் பின்பாக இருக்கிற பொல்லாத சாத்தான்தான் பிரதான காரணமாக இருக்கிறான். அவன் ஒருவன் தான் நம்முடைய சத்துரு! எதிராளி! திருடன் (சாத்தான்) திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான் (யோவான் 10: 10) என்பதாக கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது. இந்த பொல்லாத சாத்தான் என்பவன்தான், நம்முடைய வாழ்க்கையில் நஷ்டம், வியாதி,அழிவு, இழப்பு, நிந்தை – அவமானம் போன்ற பலவிதமான தீங்குகளை உண்டு பண்ணுகிறான். ஆனால் கர்த்தர் நம்மைப் பார்த்து, ...துஷ்டன் இனி உன் வழியாய் கடந்து வருவதில்லை.(நாகூம் 1:15) என்பதாக சொல்கிறார். மட்டுமல்ல, சத்துருவான அந்த சாத்தானுடைய கிரியைகள் முழுவதுமாக சங்கரிக்கப்பட்டதினாலே, இனி நீ தீங்கைக் காண்பதில்லை, இனி சத்துரு உன் வழியாக கடந்து வருவதில்லை! உனக்கு விரோதமாக செய்யப்பட்ட மந்திரங்கள் பில்லி சூனியங்கள் பிசாசின் கிரியைகள் அளிக்கப்படுகிறது என்று கர்த்தர் வாக்கு கொடுக்கிறார் (நாகூம் 1:14,15). இப்படியாக கர்த்தர் உங்களுக்கு வாக்கு கொடுத்திருக்கிறபடியினால் உங்களுக்கு சந்தோஷம் தானே! சரி, இது யாருடைய வாழ்க்கையிலாவது நடந்திருக்கிறதா? நாம் எதை வைத்து விசுவாசிப்பது?

ஒரு காலத்தில் ஊர் என்கிற தேசத்தில், யோபு என்கிற ஒரு பக்தன் பெரும் செல்வந்தராக பெயர் புகழோடு வாழ்ந் திருந்தார். அவர் தன்னுடைய வாழ்க்கையில் இழப்புகள், நஷ்டங்கள், மரணங்கள், அவமானங்கள், நிந்தைகள் போன்ற அனேக தீங்குகளை சந்தித்தார். ஆனால் அந்தத் தீங்குகள் எதுவும் நிலைத்திருக்கவில்லை. யோபு சந்தித்த தீங்குகளுக்கெல்லாம் கர்த்தர் ஒரு முடிவை உண்டாக்கினார். அவருக்கு உண்டாயிருந்த தீங்குகளின் நிமித்தமாக அவருக்கு ஆறுதல் சொல்ல, அவருடைய சொந்த – பந்தங்கள் எல்லோரும் வந்திருந்தார்கள் (யோபு 42:11). பயங்கரமான பெரிய தீங்குகளை அனுபவித்த யோபுவின் சிறையிருப்பை கர்த்தர் மாற்றி, அவரை ஆசீர்வதித்து பெருக புண்ணிய பிறகு, அவர் மறுபடியும் தன்னுடைய வாழ்க்கையில் தீங்கைக் காணவே இல்லை. மறுபடியும் யோபுவை

தீங்குக்குள்ளாக்க சத்துருவாகிய சாத்தானுக்கு கர்த்தர் இடம் கொடுக்கவே இல்லை. அதன் பிறகு சுமார் 140 வருடங்கள் யோபு உயிரோடிருந்து, நான்கு தலைமுறையாக தன்னுடைய பிள்ளைகளின் பிள்ளைகளை எல்லாம் கண்டு, பூரண வயதுள்ளவராக மரித்தார் (யோபு 42: 16,17). அந்த யோபுவின் தேவன், நமக்கும் தேவனாக இருக்கிறார். அவர்தான் இன்றைக்கு உங்களைப் பார்த்து, **இனி நீ தீங்கை காணாதிருப்பாய் உன் தீங்குக்கு நான் ஒரு முடிவை உண்டாக்குகிறேன்** என்பதாக சொல்கிறார்.



எனக்கு அன்பானவர்களே! இந்த 2023 ஆம் வருடத்திலும், ஒருவேளை தீங்குகள் உங்களைத் தாக்கி, உங்களுடைய வாழ்க்கையை சின்னாபின்னமாக்குவதைப் போல வரலாம். ஆனால் அது உங்களை சேதப்படுத்தாது. கர்த்தர், தான் வாக்குக் கொடுத்தபடியே, நீங்கள் தீங்கை காணாதபடி அதிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் பாதுகாக்கப்படவும் உங்களுக்கு கிருபை தந்து உங்களை நடத்துவார். இந்த பொல்லாத சாத்தானானவன் நம்முடைய வாழ்க்கையில் எந்த மாதிரியான தீங்குகளை உண்டாக்குவான்? என்று சற்று தியானிக்கலாம்.

## மனிதர்கள் மூலமாக தீங்கை உண்டாக்குவான்!

சபேயர் அவைகள் (எருதுகள் மற்றும் கழுதைகள்) மேல் விழுந்து, அவைகளைச் சாய்த்துக் கொண்டுபோனார்கள்; வேலையாட்களையும் பட்டயக்கருக் கினால் வெட்டிப்போட்டார்கள்; **...கல்தேயர் மூன்று பவுஞ்சாய் வந்து, ஒட்டகங்கள் மேல் விழுந்து, அவைகளை ஓட்டிக்கொண்டு போனார்கள்; வேலையாட்களையும் பட்டயக்கருக்கினால் வெட்டிப் போட்டார்கள்** (யோபு 1:15,17). யோபு ஆயிரக்கணக்கான ஆடு-மாடுகள், ஒட்டகங்கள், கழுதைகள், ஏர் மாடுகள் மற்றும் திரளான வேலைக்காரர்களையும் வைத்திருந்த பெரிய செல்வந்தனாக வாழ்ந்திருந்தார் (யோபு 1:3). பொல்லாத பிசாசானவன் சபேயர் என்கிற மனிதர்களையும் கல்தேயர் என்கிற மனிதர்களையும் கூட்டம் கூட்டமாக யோபுவுக்கு விரோதமாக எழுப்பி, எந்தவிதமான முகாந்திரமும் இல்லாமல், அவருடைய வேலைக்காரர்களை எல்லாம் வெட்டிக் கொன்று போட்டுவிட்டு, மிருக ஜீவன்களை எல்லாம் கொள்ளையடித்துக் கொண்டு போகும்படியான தீங்கை நடப்பித்தான். இப்படியாக, பிசாசானவன் பொல்லாத மனிதர்களை உங்களுக்கு விரோதமாக எழுப்பி, அவர்கள் மூலமாக உங்களுக்கு தீங்கு செய்வதற்கு பிரயாசப்படுவான்.

நீங்கள் வசிக்கிற இடத்தில், அல்லது நீங்கள் வேலை பார்க்கிற இடத்தில், உங்கள் பக்கத்தில் இருக்கிற மக்களையே உங்களுக்கு விரோதமாக சாத்தான் தூண்டி எழுப்பி, அந்த மனிதர்களைக் கொண்டே உங்களுக்கு தீங்கை செய்ய முயற்சி செய்வான். ஆனால் ஒன்றுக்கும் நீங்கள் பயப்படாதீர்கள்! ஏனென்றால், உங்களுக்கு விரோதமாக தீங்கு செய்ய அவர்கள் என்னதான் முயற்சி செய்தாலும், அந்தத் தீங்கு உங்களை அணுகாது. அவர்களால் உங்களுக்கு எந்தத் தீங்கும் செய்துவிட முடியாது. காரணம், நாம் அதைக் காணாதபடி அந்தத் தீங்கை மாற்ற கர்த்தர் வல்லமை உள்ளவராக இருக்கிறார். யோபுவுடைய வாழ்க்கையில் மனிதர்களினால் உண்டான தீங்கினால் பேரிழப்பு உண்டானது. அவமானம் வந்தது! நிந்தை வந்தது! என் சிநேகிதர் என்னை பரியாசம் பண்ணுகிறார்கள்; என் தேவனை நோக்கிக் கண்ணீர் சொரிகிறது (யோபு 16: 20) என்று சொல்லி யோபு புலம்பி அழுதார். பாருங்கள் யோபுவின் நண்பர்கள் கூட அவரைப் பரியாசம் பண்ணி, நீ உண்மையாக கர்த்தருக்கு பயந்து நடந்தால், அவர் உன் கூட இருந்தால், உனக்கு ஏன் இப்படியெல்லாம் நடக்க வேண்டும்? என்று சொல்லி, அவரைக் குற்றப்படுத்தி, பரியாசம் பண்ணி அவருடைய இருதயத்தைக் காயப்படுத்தினார்கள். யோபுவுக்கு வந்த தீங்கின் நிமித்தமாக அவருடைய சொந்த சகோதரர்கள், உறவினர்கள், சொந்த-பந்தங்கள் எல்லோருமே அவரை வெறுத்து ஒதுக்கி விட்டார்கள் (யோபு 19: 13,19) யோபு தனித்துவிடப்பட்ட நிலைமை!



என் ஊழியத்தின் ஆரம்ப காலமான 1980ஆம் வருடம், கர்த்தருடைய கட்டளையின்படியே ஊருக்கு வெளியே யாருக்கும் பிரச்சனை இல்லாத எங்களுக்கு சொந்தமான பட்டா நிலத்தில் முதல் கட்டிடமாக, சுமார் 5,000 பேர் கூடி இருந்து ஜெபிக்கும்படியாக, தேவனுடைய வீடு ஒன்றை கட்ட ஆரம்பித்தோம். திடீரென்று பக்கத்து கிராமத்தை சேர்ந்த மக்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்க ஆரம்பித்தார்கள். கலெக்டர் அலுவலகத்திலும், காவல்துறையிலும் புகார் கொடுத்து, பெரிய பிரச்சனையை உண்டாக்கி, கட்டிடத்தைக் கட்ட விடாமல் தடை பண்ண முயற்சி செய்தார்கள். ஒருநாள், ஏன் இந்த மக்கள் எந்த காரணமும் இல்லாமல் நம்மைப் பகைத்து, நமக்கு விரோதமாக எழும்பி தீங்கை உண்டு பண்ணுகிறார்கள்? என்று விசாரித்துப் பார்த்த போது, அந்தப் பகுதியை சேர்ந்த பண வசதி படைத்த, பொல்லாத இருதயம் கொண்ட ஒரு மனிதன், எனக்கு விரோதமாக அந்தக் கிராமத்து மக்களைத் தூண்டிவிட்டு, எப்படியாவது இந்த ஊழியத்திற்கு தீங்கு செய்ய வேண்டும், கட்டிடத்தைக் கட்ட விடாமல் தடுத்துவிட வேண்டும், என்று சொல்லி சவால் விட்டு, மிகத் தீவிரமாக செயல்பட்டான். கிட்டத்தட்ட ஒரு வருடம் தடை! கஷ்டம்! நெருக்கம்! காரணம் அந்த மனிதனுடைய

உள்ளத்தில் இருந்த பொறாமை! மத வைராக்கியம்! இந்தக் காரியத்தின் நிமித்தமாக அந்த சமயத்தில் என் மனதிற்குள் சற்று பாரம் இருக்கத்தான் செய்தது. ஒருநாள் தேவ சமூகத்தில் அமர்ந்து நான் ஜெபித்த போது, **மகனே நீ ஒன்றுக்கும் பயப்படாதே! நான் இந்த தீங்கையெல்லாம் ஒழியப்பண்ணுவேன்** என்று எனக்கு வாக்குக் கொடுத்தார். அவர் கொடுத்த வாக்கை வைத்து நான் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருக்கும் போது, ஒருநாள் மகனே அந்தத் தீங்கு முடிந்தது, இனி நீ தீங்கைக் காணாதிருப்பாய், வேலையை நடத்து, என்று திருவுளம் பற்றினார். அதன்படியே மிகுந்த தைரியமாக நாங்கள் வேலையை நடத்தினோம். ஆனால் அந்தப் பொல்லாத மனிதனுக்கு என்ன நடந்ததென்று தெரியுமா? அந்த மனிதன் தன்னுடைய சொத்துக்களை எல்லாம் இழந்து, செய்து கொண்டிருந்த வியாபாரத்தை இழந்து, அவமானப்பட்டு, நிந்திக்கப்பட்டு கடைசியில் இந்த உலகத்திலேயே இல்லாமல் போய்விட்டான்.



எனக்கு அன்பானவர்களே! நீங்கள் வசிக்கிற இடத்தில், நீங்கள் வேலை செய்கிற இடத்தில்,அல்லது நீங்கள் தொழில் செய்கிற இடத்தில், அல்லது நீங்கள் ஊழியம் செய்கிற இடத்தில் உங்களை யாராவது தொந்தரவு செய்கிறார்களா? கலங்காதிருங்கள்!அவர்கள் காணாமலே போய்விடுவார்கள்.

## இயற்கையின் மூலமாக தீங்கை உண்டாக்குவான்

பொல்லாத சாத்தான் நமக்கு விரோதமாக தீங்கை உண்டு பண்ணுவதற்கு, சில சமயங்களில் இயற்கையைக் கூட பயன்படுத்துவான். சூரியன், சந்திரன், கடல், புயல், மழை, நட்சத்திரங்கள் போன்ற இயற்கை கர்த்தருடைய கட்டுப்பாட்டிற்குள் தான் இருக்கிறது. ஆனால் சில சமயங்களில் பொல்லாத சாத்தான் கர்த்தரிடத்தில் இயற்கையை தான் பயன்படுத்தும் படியான அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டு நமக்கு விரோதமாக எழும்புவான். காரணம், அவனாக இயற்கையைப் பயன்படுத்த முடியாது. கர்த்தர் அனுமதி கொடுத்தால் தான், அவனால் இயற்கையை பயன்படுத்த முடியும். .வானத்திலிருந்து தேவனுடைய அக்கினி விழுந்து (யோபுவினுடைய) ஆடுகளையும் வேலையாட்களையும் சுட்டெரித்துப் போட்டது; ...**வனாந்தர வழியாய்ப் பெருங்காற்று வந்து, அந்த வீட்டின் நாலு மூலையிலும் அடிக்க, அது (யோபுவினுடைய) பிள்ளைகளின்மேல் விழுந்ததினால் அவர்கள் இறந்து போனார்கள்** (யோபு 1:16,19) என்பதாக பரிசுத்த வேதாகமம் குறிப்பிடுகிறது. கர்த்தர் சில சமயங்களில், தனது நியாயத்தீர்ப்பை பூமியில் விளங்கப் பண்ணும்படியாக, சுனாமி, புயல், பூமியதிர்ச்சிகள், பெருவெள்ளம், பஞ்சம் போன்ற தீங்குகளை அனுமதிக்கக் கூடும். ஆனால், அதையே பிசாசானவனும் பயன்படுத்தி நமக்கு விரோதமாக செய்ய எத்தனிப்பான்.

கொடிதான இந்த கடைசிக் காலத்தில், பெரு வெள்ளத்தினாலும், அக்கினியினாலும், பெரும் புயலினாலும், பஞ்சங் களினாலும், கொள்ளை நோய்களினாலும், யுத்தங்களினாலும், இயற்கையின் சீற்றங்களினாலும் பலவிதமான தீங்குகள் உண்டாகும். ஆனால் கர்த்தர், என் மகளே(னே), உன்னைச் சுற்றிலும் தீங்கு இருந்தாலும், நீ அந்தத் தீங்கைக் காணாதிருப்பாய், என்று உங்களுக்கு வாக்குக் கொடுக்கிறார்.

அமெரிக்கா தேசம் கலிபோர்னியா மாகாணத்தில் லாஸ் ஏஞ்சலஸ் என்கிற அந்தப் பட்டணத்தில் கோடைக் காலங்களில் வெயில் மிகக் கொடிதாக இருக்கும். அந்த சமயங்களில் அருகாமையில் இருக்கிற காடுகளில் தீ தானாகப் பற்றிப் பட்டணத்திற்குள் பயங்கரமான சேதங்களை உண்டாக்கிவிடும். ஒரு வீடு தீப்பிடித்தால் மள மளவென்று அத்தனை வீடுகளிலும் தீப்பிடித்துக் கொள்ளும். ஏனென்றால், அங்குள்ள கால சூழ்நிலைக்கு ஏற்றபடி அஸ்திபாரம் வரைக்கும்தான் கான்கிரீட் போடுவார்கள். அதற்கு மேல் எல்லாமே மரத்தினால்தான் கட்டுவார்கள். அங்குள்ள ஒரு மலைப் பகுதியில் அப்படிப்பட்ட அனேக வீடுகள் இருந்தது. அங்கு கர்த்தருக்கு ஊழியம் செய்கிற தமிழ்நாட்டைச் சார்ந்த ஒரு விசுவாசிக் குடும்பத்தினரும் அதே பாணியில் வீடுக் கட்டி குடியிருந்தார்கள். ஒரு சமயம், அந்த பகுதியில் காட்டுத் தீ பரவிய போது, காவல்துறையினர் வந்து உடனடியாக வீட்டைக் காலி செய்து விட்டு பாதுகாப்பான வேறு இடத்திற்குப் போய் விடும்படியாக சொல்லி விட்டு போய்விட்டார்கள். ஆனால் அந்த விசுவாசக் குடும்பத்தினர், வீட்டைக் காலி செய்யாமல், கர்த்தருடைய முகத்தை நோக்கிப் பார்த்து, ஆண்டவரே, உம்முடைய பிள்ளைகளாகிய எங்களுடைய இந்த வீட்டை இந்தத் தீங்கு தொடாதபடி பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி ஜெபித்து விட்டு, மற்ற எல்லோரையும்போல அங்கிருந்து வெளியேறி, வேற பாதுகாப்பான இடத்திற்கு போய்விட்டார்கள். நெருப்பு பரவிப் பரவி அந்தப் பகுதி முழுவதும் இருந்த அத்தனை வீடுகளிலும் பற்றிப் பிடித்து சாம்பலாக்கி விட்டது. அந்த விசுவாசக் குடும்பத்தாரின் அந்த ஒரு வீடு மட்டும் நெருப்பில் சேதமடையாமல் அப்படியே இருந்தது. தீ அணைப்புத் துறையினர் வந்து பார்த்தபோது, இந்த



வீடு மட்டும் எப்படி தப்பியது? என்று மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். பாருங்கள்! அந்த தீங்கு அந்த வீட்டை அணுகாதபடிக்கு கர்த்தர் அதைப் பாதுகாத்தார். அதற்காக அந்த விசுவாச குடும்பத்தார் கர்த்தருக்கு நன்றி சொன்னார்கள்.



எனக்கு அன்பானவர்களே! கர்த்தர் எவ்வளவு அற்புதமானவர்! உங்களைச் சுற்றிலும் என்ன தீங்கு நடந்தாலும், அது உங்களை சேதப்படுத்தாது. காரணம் இனி நீ தீங்கை காணாதிருப்பாய் என்று கர்த்தர் சொல்கிறார். உங்களைச் சுற்றிலும் கொள்ளை நோயின் தாக்கம் இருந்தாலும், உங்கள் குடும்பம் பாதுகாக்கப்படும்! உங்களைச் சுற்றிலும் பூமி அதிர்ச்சியினால் பாதிப்பு உண்டானாலும், நீங்கள் பாதுகாக்கப்படுவீர்கள்! உங்களைச் சுற்றிலும் பலவிதமான ஆபத்துகளும், தீமைகளும் பெருகி வந்தாலும், நீங்கள் தீங்கை காண்பதில்லை! இதுதான் கர்த்தர் இன்றைக்கு உங்களுக்கு கொடுக்கிற வாக்குத்தத்தம். ஆகவே, கர்த்தர் கொடுத்திருக்கிற இந்த வாக்குத்தத்தத்தை உறுதியாகப் பற்றிக்கொள்ளுங்கள்.

## நேரடியாக வந்து தீங்கு உண்டாக்குவான்

**...சாத்தான் கர்த்தருடைய சந்நிதியைவிட்டுப் புறப்பட்டு, யோபின் உள்ளங்கால் தொடங்கி அவன் உச்சந்தலைமட்டும் கொடிய பருக்களால் அவனை வாதித்தான். அவன் ஒரு ஓட்டை எடுத்து, தன்னைச் சுரண்டிக்கொண்டு சாம்பலில் உட்கார்ந்தான்** (யோபு 2:7,8). பொல்லாத சாத்தான் நேரடியாகவும் வந்து நமக்கு தீங்கை உண்டு பண்ணுவான். சாத்தான் நேரடியாகவே வந்து யோபுவினுடைய உச்சந்தலை முதல், உள்ளங்கால் வரை கொடிய பருக்களால் வாதித்தான். ஆடை கூட உடுத்த முடியாமல், ஒரு துணியை மட்டும் தன் அரையில் கட்டிக்கொண்டு சாம்பலில் உட்கார்ந்து விட்டார். அதேபோல பிசாசானவன் நேரடியாகவே வந்து, உங்களுக்கு நோயைக் கொண்டு வந்து, உங்களை முடக்கி விடும்படியாகப் பிரயாசப்படுவான்.



ஒரு சகோதரர் முடக்கு வாதத்தினால் பாதிக்கப்பட்டார். அவருடைய கை கால்களில் உள்ள விரல்கள் எல்லாம் மடங்கி விட்டது. சரீரம் முழுவதும் இருக்கிற எல்லா எலும்பு மூட்டுகளிலும் பயங்கரமான வலி நடக்க முடியாமல் சுமார் 18 வருடங்களாக மிகவும் கஷ்டப்பட்டார். எத்தனையோ டாக்டர்களைப் பார்த்து எவ்வளவோச் சிகிச்சைகளை செய்து பார்த்தும் எந்த பிரயோஜனமும் இல்லை. இதை சுகமாக்கவே முடியாது, இருந்தாலும் மேலும் இந்த வியாதி தாக்காமல் இருக்க வேண்டுமானால், நாங்கள் ஒரு மருந்து கொடுக்கிறோம், சாகும் வரைக்கும் அந்த மருந்தை நீங்கள் சாப்பிட்டுத்தான் ஆக வேண்டும் என்று சொல்லி வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள். மனமுடைந்து போயிருந்த அவர்கள், ஒருநாள் குடும்பமாக நமது தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டு இருந்தபோது, ஜெப வேளையில்; நீங்கள் விசுவாசத்தோடு ஜெபித்தால், எத்தனை வருட வியாதியாக இருந்தாலும், கர்த்தரால் அதை மாற்ற முடியும் என்று சொல்லப்பட்ட வார்த்தையைக் கேட்டபோது, அவர்களுக்குள் ஒரு பெரிய விசுவாசம் உண்டானது. உடனே அவருடைய குடும்பத்தார் அனைவரும் அவருடைய தலையின் மீது கை வைத்து, இயேசு கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லி ஜெபித்த போது, அந்த சகோதரருடைய சரீரத்திற்குள் இருந்த ஒரு பொல்லாத அசுத்த ஆவி அவரை விட்டு வெளியேறிப் போனது. அந்த வினாடியே 18 வருடங்களாக அவருக்குள் இருந்த அந்த முடக்குவாத நோய் பூரணமாக சுகமாகி விட்டது. அந்த ஆவி அவரை விட்டு விலகியவுடனே, அற்புதமான ஒரு சுகத்தை அவர் பெற்றுக் கொண்டார்.

இப்படியாக பிசாசானவன் வியாதிகளைக் கொண்டு வந்து, நம்மை முடக்கிப் போட பிரயாசப்படுவான். ஒருவேளை இன்றைக்கு நீங்களும் கூட ஆஸ்துமா நோயினாலோ, அல்லது குடல் புண்ணினாலோ அல்லது புற்று நோயினாலோ அல்லது சரும நோயினாலோ அல்லது வேறு ஏதாவது தீராத நோயினாலோ பாதிக்கப்பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கலாம். அல்லது பொல்லாத சாத்தானானவன் நேரடியாக வந்து உங்களுக்கு வியாதியை கொடுத்திருக்கலாம். இயேசு கிறிஸ்துவின் நாட்களில் வாழ்ந்திருந்த ஒரு பெண்ணை பெலவீனப்படுத்தும் ஒரு அசுத்த ஆவி அடிமைப்படுத்தி 18 வருடங்களாக நிமிர முடியாமல், ஒரு கூனியாக வைத்திருந்ததைப் போல (லூக்கா 13: 10-13) சாத்தான் உங்களையும் நேரடியாக வியாதியினால் தாக்கி இருக்கலாம், அல்லது மன அழுத்தம், கலக்கம் போன்றவைகளினால் உங்களுடைய தூக்கத்தைக் கெடுத்து, உங்களுடைய நிம்மதியை குலைத்து, உங்களை பயத்திலேயே வைத்திருக்க வேண்டும் என்று சாத்தான் கிரியை செய்யலாம். ஆனால் கர்த்தர் உங்களைப் பார்த்து, கலங்காதே, இனி நீ தீங்கைக் காணாதிருப்பாய் என்று வாக்கு கொடுக்கிறார்.

**எனக்கு அன்பானவர்களே! கர்த்தர் எனக்காக சிலுவையில் தீங்கை ஏற்றுக் கொண்டார்! பிசாசின் வல்லமையை அழித்து விட்டார். என் பாவ சாபங்களை எல்லாம் சுமந்து முடித்து விட்டார். இனி நான் தீங்கை காண்பதில்லை! இயேசு கிறிஸ்து எனக்கு விடுதலை தருவார்!! என்று நீங்கள் விசுவாசித்தால், இன்றைக்கு உங்களுக்கு விடுதலை உண்டாகும். இந்த நாள் முதல் இனி நீங்கள் தீங்கை காண்பதில்லை இந்த வருடம் நன்மைகளை காண்பீர்கள் ●**

# வாலிபர் உலகம் பத்திரிக்கை

தமிழ், ஆங்கிலம், ஹிந்தி

இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் மூலமாக 2009ம் ஆண்டு ஜுன் மாதம் முதல் வாலிபர் உலகம் என்ற மாதாந்திர பத்திரிக்கையை வெளியிட தேவன் கிருபை செய்தார். கர்த்தரின் பெரிதான கிருபையால் 12 வருடங்களாக கர்த்தர் வழிநடத்தி வருகிறார். இதில் ஆயிரக்கணக்கான வாலிபர்கள் சந்தாதாரர்களாக இணைந்துள்ளனர். மாதந்தோறும் ஒவ்வொரு தலைப்பை மையமாக வைத்து வாலிபர்களுக்கு ஏற்ற முறையில் வெளியிட தேவன் உதவி செய்து வருகிறார். தமிழ் வாசகர்களை தவிர்த்து ஆங்கிலம் வாசகர்களுக்காக 2014ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் Youth Life என்ற மாதாந்திர ஆங்கில பத்திரிக்கையை வெளியிட கடந்த 8 வருடங்களாக தேவன் கிருபை பாராட்டி வருகிறார். ஹிந்தி மொழி பேசும் மக்களுக்காக 2021ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் ஹிந்தி பத்திரிக்கை மாதந்தோறும் Website மூலம் அனுப்பப்பட்டு வருகிறது.









வாலிபர் உலகம் பத்திரிக்கையை உருவாக்கும் பணியில் அநேக எழுத்தாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் வடிவமைப்பாளர்கள் என ஒரு குழு இவ்வூழியத்தை நிறைவேற்ற கர்த்தர் உதவி செய்து வருகிறார். இப்பத்திரிக்கையில் வரும் சாட்சிகள் ஆண்டவரை அறியாத வாலிபர்கள் இயேசுவை அறிந்து கொள்ளவும், கட்டுரைகள் அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் வளரும்படியாகவும் மற்றும் எழுப்புதலின் செய்திகள் என ஒவ்வொரு மாதமும் வெளியிடப்பட்டு வருகிறது. தேவனுக்கே மகிமை!






Youth Life Magazine

# ஜெப ஊழியம்



இயேசு விடுவிக்கிறார் ஊழியம் ஜெபத்தினால் கட்டப்பட்டது. அதுபோலவே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியமும் ஒவ்வொரு ஆண்டும் ஜெபிக்கிற வாலிபர்களை எழுப்ப வேண்டுமென்ற தரிசனத்தோடு செயல்பட்டு வருகிறது. கடந்த 2021-2022ஆம் ஆண்டுகளில் எழுப்புதலைப் பற்ற வைப்போர் முகாம்கள் நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்ட Igniters தனியாகவும், குழுவாகவும், Conference Call, zoom, google meet மற்றும் ஜெபக்குழு மூலமாகவும் தினமும் குறைந்தது ஒரு மணி நேரம் ஜெபித்து வருகின்றனர். தமிழ்நாடு மட்டுமல்லாமல் ஆந்திரா, தெலுங்கானா, மும்பை, பாண்டிச்சேரி, கர்நாடகா மாநிலங்களில் உள்ள Ignitersம் ஜெபித்து வருகிறார்கள். இதன் மூலமாக இந்த வருடம் **3,10,351 மணி நேரங்கள்** எழுப்புதலுக்காகவும் ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காகவும் ஜெபித்துள்ளனர்.







குறிப்பு: நீங்களும் இதுபோன்ற ஜெபக்குழுக்களில் கலந்துக் கொண்டு ஜெபிக்கும்போது சீக்கிரத்தில் நம் தேசத்தில் எழுப்புதலைப் நாம் பார்க்க முடியும்.







# பள்ளிக் கல்லூரிக் கூடுகை






























கடந்த 2020-2021ஆம் ஆண்டுகளில் பள்ளிக் கல்லூரிகளில் சென்று சுவிசேஷம் அறிவிக்க முடியாத சூழ்நிலை உருவானது. 2022ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் உள்ள பள்ளிக் கல்லூரிகளுக்கு சென்று சுமார் 35,000க்கும் அதிகமான மாணவ மாணவியருக்கு சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். அநேக மாணவர்கள் படிப்பதில் இருக்கிற பிரச்சனைகளை சொல்லி ஜெபித்து செல்கின்றனர். ஒருசில பள்ளிக் கல்லூரிகளில் ஜெபக்குழுக்கள் ஆரம்பித்து பள்ளியின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபித்து வருகிறார்கள். இக்கூடுகையின் விளைவாக அநேக மாணவர்கள் தங்கள் படிப்பில் முழு கவனம் செலுத்தி படிப்போம் என்றும், சமூக வலைத்தளங்களில் நேரத்தை வீணடிக்கமாட்டோம் என்றும் தீர்மானங்களை எடுத்தனர். கர்த்தருக்கே மகிமை!

















குறிப்பு: உங்கள் பள்ளிக் கல்லூரிகளில் கூடுகை நடத்த Motivational வகுப்புகள் எடுக்க நீங்கள் விரும்பினால் 9750955547 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.























# எழுப்புதலை பரவச் செய்வோர் முகாம்
## (IGNITERS CAMP)

எழுப்புதலில் பயன்படுத்துவதற்காக 7 விதமான யௌவன சந்ததியை எழுப்புவேன் என்று கர்த்தர் வாக்குக்கொடுத்தபடி, கடந்த 2021-2022ஆம் வருடங்களில் வாலிபர்களுக்கென்று தமிழ்நாடு கர்நாடகா, கேரளா, வட இந்தியா, கிழக்கிந்தியா மற்றும் ஆந்திரா மாநிலங்களிலிருந்து சுமார் 9,465 வாலிபர்கள் வரவழைக்கப்பட்டு எழுப்புதலைப் பரவச் செய்வோர் முகாம் (Igniters Camp) நடத்தப்பட்டது. முதன்முதலாக நடத்தப்பட்ட இந்தப் பயிற்சி முகாம்களில் பங்கு பெற்ற வாலிபர்களை கர்த்தர் தமது ஆவியினால் விடுதலையாக்கி, தமது வல்லமையினால் நிரப்பி அனுப்பினார். எழுப்புதலுக்காக ஜெபிப்பதன் அவசியத்தையும், சுவிசேஷம் அறிவிப்பதன் முக்கியத்துவத்தையும் குறித்து நமது சகோதரர் மோகன் சி.லாசரஸ் அவர்கள் விளக்கிச் சொல்லி ஜெபித்தபோது, கலந்து கொண்ட வாலிபர்கள் எல்லோரையும் கர்த்தர் தம்முடைய ஜெப ஆவியினாலும், ஆத்தும பாரத்தினாலும் நிரப்பினார். தீர்க்கதரிசி வின்சென்ட் செல்வக்குமார் அவர்கள் தீர்க்கதரிசனத் தலைமுறை மற்றும் யுத்த தலைமுறைகளைக் குறித்து பகிர்ந்துக் கொண்டு ஜெபத்தில் நடத்திய போது அநேகர் யுத்த அபிஷேகத்தால் நிரப்பப்பட்டார்கள்.






















REVIVAL IGNITERS








REVIVAL IGNITERS



























கலந்து கொண்ட வாலிபர்கள் தங்கள் பகுதிகளில் கடந்து சென்று சுவிசேஷம் அறிவித்ததின் விளைவாக இந்த வருடம் மட்டும் 7,50,000 ஆத்துமாக்களை சந்தித்திருக்கிறார்கள். 3,18,351 மணி நேரங்கள் ஜெபித்திருக்கிறார்கள். கர்த்தருக்கே மகிமை!













# வாலிபர் உலகம்

## உங்கள் கையில் உள்ளதா?

வாலிபர்களே! உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் மாற்றத்தைக் கொண்டு வரும் இப்பத்திரிக்கையை நீங்கள் தவறாமல் வாசியுங்கள். நீங்கள் வாசித்தப்பின் இப்பத்திரிக்கையை உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள்!

**தனிப் பிரதி ₹10**

**ஆண்டு சந்தா ₹100**

**ஆயுள் சந்தா ₹1000**










அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலங்களில் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம்!

Mo/Cheque/DD - Jesus Redeems Youth Ministry" என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழேக் கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும்.

| | |
|---|---|
| A/c. Name | : JESUS REDEEMS YOUTH MINISTRY |
| A/c. No. | : 054100710400515 |
| BANK | : TAMILNAD MERCANTILE BANK LTD., |
| BRANCH CODE | : Prahasapuram, Nazareth |
| BRANCH CODE | : 000054 |
| IFS CODE | : TMBL0000054 |
| MICR CODE | : 627060021 |
| SWIFT CODE | : TMBLINBBTUT |

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-353333
Cell:9750955547
youth@jesusredeems.org
www.jesusredeems.com
www.youthworld.in

**உங்களது சந்தா முடியும் நிலையில் இருந்தால்**
**உடனே உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்.**

# ஜெபக் கையேடு

ஜெபம் பெனிட்டா

## போதைப் பொருட்கள்

சென்னையில் கடந்த 6 மாதங்களில் சட்ட விரோதமாக விற்பனைச் செய்யப்பட்ட 1950 கிலோ கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் கோர்ட் உத்தரவுப்படி அழிக்கப்பட்டது. ஜனவரி முதல் அக்டோபர் வரை சட்ட விரோத போதை மாத்திரைகள் விற்பனை செய்ததாக 25 வழக்குகள் பதிவு செய்து 42,302 போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப் பட்டது. 2022ம் ஆண்டு 1,557 கிலோ கஞ்சா, 24.60 கிலோ மெத்தாம் பிட்டமைன், எபிட்ரின் பறிமுதல் செய்யப்பட்டது. 10 மாதங்களில் 1,557 கிலோ கஞ்சா, 24 கிலோ போதைப் பொருள், 42 ஆயிரம் மாத்திரைகள் பறிமுதல் செய்யப் பட்டது.



### ஜெபக்குறிப்புகள்

1. போதைப் பொருட்கள் முற்றிலும் முடக்கப்படவும், போதைப் பொருட்கள் இல்லாத தேசமாக மாறவும் ஜெபிப்போம்.
2. போதைப் பொருட்களை பயன்படுத்துவதால் பலவித நோய்களினால் பாதிக்கப்பட்டு மரணமடைகிறார்கள். இந்த மரணங்கள் தடுக்கப்பட ஜெபிப்போம்.
3. போதைப் பொருட்களை பயன்படுத்துவதால் குடும்பங்களில் சமாதான குறைச்சல் ஏற்படுகிறது. குடும்பங்கள் சமாதானம் பெற ஜெபிப்போம்.
4. போதைப் பொருட்களை விற்பனை செய்வோர் மேல் நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.

## மதுபானம்

நாட்டில் மதுகுடிப்போர் எண்ணிக்கை 16 கோடியாக உள்ளது. 18 வயது முதல் 49 வயதுடைய 95% ஆண்கள் மது குடிக்கின்றனர். ஆண்டுக்கு 600 கோடி லிட்டர் மதுவை மக்கள் அருந்துகிறார்கள். கள்ளச்சாராயம் குடித்து 5 ஆண்டில் 6,000 பேர் பலியாகியுள்ளனர். தலைநகர் டெல்லியில் மதுபானம் அருந்தும் பெண்களின் எண்ணிக்கை 37% அதிகரித்துள்ளது. கொரோனாவுக்குப் பிறகு ஆண்களைவிட பெண்களிடம் குடிக்கும் பழக்கம் அதிகரித்து உள்ளது என்று ஆய்வில் வெளிவந்துள்ளது. நாட்டின் மதுவிற்பனை வருமானம் 3.82 லட்சம் கோடியாக உள்ளது.



### ஜெபக்குறிப்புகள்

1. மதுபானத்தை அருந்தும் 16 கோடி மக்களும் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.
2. இளம் வயதில் குடிபழக்கத்திற்கு அடிமைப் பட்டிருக்கும் 95% ஆண்கள் இப்பழக்கத்திலிருந்து வெளிவர ஜெபிப்போம்.
3. கள்ளச்சாராயம் தேசத் திலிருந்து முற்றிலும் அழிக்கப் படவும், மரணங்கள் தடுக்கப்படவும் ஜெபிப்போம்.
4. மதுபானம் தேசத்திற்கு சாபத்தைக் கொண்டு வரும் என்பதை உணர்ந்து மதுபானக் கடைகள் மூடப்பட அரசு நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.










# பள்ளியிலிருந்து இடைநிற்றல்

கடந்த ஓராண்டில் மட்டும் 20,000 பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. நாட்டில் 14.89 இலட்சம் பள்ளிகள் உள்ளன. 25.57 கோடி மாணவர்கள் படிக்கின்றனர். 95.07 இலட்சம் ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். படிப்பைப் பாதியில் நிறுத்துவோரின் எண்ணிக்கை 14.6% ஆக உள்ளது. 42 கோடி பேர் வறுமைக்கோட்டிற்கு கீழ் இருக்கிறார்கள். 35.7% மாணவர்களும், 21.4% மாணவிகளும் படிப்பில் ஆர்வம் இல்லாமல் இருக்கிறார்கள். குடும்ப வறுமை, படிப்பில் ஆர்வம் இல்லாமை, வீட்டு வேலைக்கு செல்வது, போன்ற காரணங்களால் படிப்பை இடையில் நிறுத்துகிறார்கள்.




## ஜெபக்குறிப்புகள்

1. நாட்டில் உள்ள எல்லாப் பள்ளிகளும் நல்ல முறையில் செயல்படவும், நல்ல ஆசிரியர்கள் மூலம் கல்வி கற்பிக்கப்படவும் ஜெபிப்போம்.
2. பல்வேறு காரணங்களால் படிப்பை பாதியில் நிறுத்தும் மாணவர்கள் தொடர்ந்து படிப்பதற்கு ஏற்ற வாய்ப்புகள் உருவாக்கப்பட அரசு ஆவன செய்யும்படி ஜெபிப்போம்.
3. மூடப்பட்ட பள்ளிகள் திறக்கப்படவும், கல்வியில் எந்த கலப்படமும் இல்லாமல் கற்றுக்கொடுக்கப்பட ஜெபிப்போம்.
4. படிப்பை இடையில் நிறுத்தி வேலைக்கு சென்று சம்பாதிக்கும் மாணவர்களுக்கு அரசு நலதிட்டங்கள் வழங்கி படிப்பைத் தொடர நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.

# லிவிங் டு கெதர் (Living together)



டேட்டிங் எனப்படும் கலாச்சாரத்தின் அடுத்தக் கட்ட நகர்வு தான் லிவிங் டு கெதர் என்ற வாழ்க்கை முறை. தற்போது பெண்கள் திருமணம் தேவையில்லாத ஒரு விஷயமாக பார்க்கின்றனர். காரணம் அவர்களது குடும்பத்தில் யாராவது திருமணம் செய்து பாதிக்கப்பட்டிருந்தால், இவர்கள் திருமணம் செய்து கொள்ளாமல் வாழும் வாழ்க்கை முறையை தேர்ந்தெடுக்கின்றனர். சென்னை, பெங்களூர், ஹைதராபாத், டெல்லி, மும்பை போன்ற பெருநகரங்களில் சர்வ சாதாரணமாக இளைஞர்கள் மத்தியில் இந்த கலாச்சாரம் பின்பற்றப்பட்டு வருகிறது. தற்போது லிவிங் டு கெதர் முறையால் அநேக கொலைகள் நடைபெற்று வருகிறது.

## ஜெபக்குறிப்புகள்

1. லிவிங் டு கெதர் என்ற மேற்கத்திய கலாச்சாரம் நம் தேசத்தை விட்டு முற்றிலும் அகற்றப்பட ஜெபிப்போம்.
2. கலாச்சார சீரழிவினால் இளம் பெண்கள் பாதிக்கப்படாமல் அவர்கள் மனக்கண்கள் திறக்கப்பட ஜெபிப்போம்.
3. தங்களுடைய வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்கும் போது, ஜெபித்து ஞானமாய் செயல்பட ஜெபிப்போம்.
4. வாழ்க்கையை இழந்து நிற்கும் இளம்பெண்கள் மற்றும் ஆண்கள் இந்த கலச்சாரத்தை விட்டு வெளிவர ஜெபிப்போம்.







## எழுப்புதலை பரவச் செய்வோர் மாதாந்திரக் கூடுகை

*(Revival Igniters Monthly Fellowship)*

வாலிபர்கள் தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் பெலப்பட, வாலிபர் ஊழியத்தின் மூலமாக ஒவ்வொரு மாதமும் தமிழ்நாட்டில் 30 இடங்களிலும், கர்நாடகா, ஆந்திரா, மும்பை என மற்ற மாநிலங்களில் 7 இடங்களிலும் **Revival Igniters** மாதாந்திரக் கூடுகை நடைபெற்று வருகிறது. இதில் சுமார் 2000 வாலிபர்கள் பங்கு பெற்று ஆவிக்குரிய வாழ்வில் பெலப்பட்டு வருகிறார்கள். இக்கூடுகையின் மூலமாக அநேக வாலிபர்கள் தங்களுடைய பரிசுத்த வாழ்க்கையில் பெலப்படவும், கர்த்தரோடு பேசுகிற, உறவாடுகிற அனுபவங்களை பெறுவதற்கு வழி வகுக்கிறது.











ஒவ்வொரு
மாதமும் கடைசி
ஞாயிற்றுக் கிழமைகளில்
**Igniters Live Youth Meeting**
சமூக வலைத்தளங்கள் மூலமாக ஒளிப்பரப்பப்படுவதில் சுமார் 3000க்கும் அதிகமான வாலிபர்கள் இணைகிறார்கள். ஒவ்வொரு மாதமும் கர்த்தர் வாலிபர்களோடு பேசுகிறார். கர்த்தர் ஜெபிக்கிற வாலிபர்களை எழுப்பி வருகிறார். அதோடு 50 கோடி தரிசனத்திற்காகவும் ஜெபிக்கிறார்கள்.

ஒவ்வொரு 5வது ஞாயிற்றுக்கிழமைகளில் சமூக வலைத்தளங்கள் மூலமாக Hindi நிகழ்ச்சி ஒளிப்பரப்பப்பட்டு ஹிந்தி பேசும் வாலிபர்களும் எழுப்புதல் தரிசனத்தைப் பெற்று அதற்காக ஜெபித்து வருகிறார்கள். இதில் மாதந்தோறும் 750க்கும் அதிகமான வாலிபர்கள் இணைகிறார்கள். இரட்சிக்கப்படாத வாலிபர்கள் இரட்சிக்கப்பட்டு இன்று சாட்சியாக எழும்பி இருக்கிறார்கள்.

**தேவனுக்கே மகிமை!**










குறிப்பு: ஒவ்வொரு வாரமும் எங்கு நடைபெறுகிறது என்பதை ௨ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. நீங்களும் தவறாமல் கலந்து கொள்ளுங்கள்.

### EVERY 1ST SUNDAY

(1ST JANUARY)

**VELLORE (3 PM)**
Gethsamane Prayer Center, Ajantha Mahal, No.3,6th West Cross Road, Gandhi Nagar.
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center, No:62 2nd Floor, Benny Kumaran Main Road. 9442082200

### EVERY 2ND SUNDAY

(8TH JANUARY)

**AMBUR (3PM - 6PM)**
Concordia Hr.Sec.School, Opp Rly. Station.
9597927799 | 9442885315

**THANJAVUR (3:00PM)**
Gethsemane Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, M.C.Road.
9444381971 | 9488475315

**KOVILPATTI (3PM - 5.30PM)**
St. Paul's Matriculation School, Kovilpatti.
9677858766 | 9787322334

# REVIVAL IGNITERS

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

**TUTICORIN (3PM - 5:30 PM)**
Gethsemane Prayer Center, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road, Muniasamypuram, (Land mark : South Police Station to Kamaraj college Road) . 9442885315

**TIRUPATI (3PM)**
Old Community Hall, West Church.
9985033401 / 9442885315

**SANKARANKOIL (2:30-5)**
Gethsemane Prayer CenterSekinah Mahal Mullai Nagar.
9750955548 / 8344949555

### EVERY 2ND SATURDAY

(14TH JANUARY)

**BANGALORE (3- 5PM)**
Telugu Church, No.21, Nethaji Road, Railway Line, Pulikeshi Nagar, Frazer Town, Opp. BWSSB Office
9962085523 | 9591077110

**ALANGULAM ( 2:30PM)**
P.M.V. Packiyavathy Building R.A. Nursing Institute SCV Computers (top floor) Main Road, Alangulam, Near Union Office Opposite.
9965377427 | 9750955548

**THENI (2.30PM - 5 PM)**
Gethsamane Prayer Center, No.203, Madurai Road, (opp Anantham Silk) Dr. Kamaraj Hospital, 1st Floor.
9750955548 | 9976766422

**SURANDAI (2.30PM)**
Jawarhalal Middle School,Surandai.
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
Getsamane prayer Center
9677858766 / 9442906567

**SATHANKULAM (3-5:30PM)**
Hendry Matric Higher Secondary School Mela Sathankulam
9442885315

**CHENGALPET (3:00 -5:30PM)**
Blessing School, Tirukazhukundram Road.
9488475315

### EVERY 3RD SATURDAY

(21ST JANUARY)

**MADURAI (3-5.30 PM)**
American College, Higher Secondary School, (AC School)Backside to Arumugam Hotel, Tallakulam Bus Stop.
9750955548 | 9344759316

### EVERY 3RD SUNDAY

(15TH JANUARY)

**TIRUNELVELI (2:30 PM)**
Gethsemane Prayer Center Shah Complex No: 43/R4, Rajendra Nagar Trivandrum Road.
9750955548 | 9488212915

**COIMBATORE (4PM)**
Gethsamane Prayer Center,
No:90,1st, Floor Arts College Rd., Near Charan Tower, Coimbatore.
0422 - 2309040 | 8903405315

**TRICHY (3PM)**
Gethsamane Prayer Center 22A, Ist Floor, Thennur High Rd., Near KMC Bus Stop, Thennur, 9488475315

**JEBAMALAI (2PM)**
Kadaiyam (via), Keelamathapuram, Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3.30PM)**
VGP Victory House, Mount Road.
9488475315

**NALUMAVADI (3-5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**THIRUVARUR (3:30 PM)**
Gethsamane Prayer Center,1A/25B, Bypass Road (Opp Arasu Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3 - 6P.M.)**
Gethsemane Prayer Centre,
MBT Road, Navalpur
9500283179 | 9442885315

**ERODE 4:00 - 6:30PM**
Gethsamane Prayer Center,
No.216, 1st Floor, Near Fire Service, Gandhiji Road
9750722000

## EVERY 4TH SATURDAY

(28TH JANUARY)

**PERAMBALUR (5 - 8PM)**
Gethsamane Prayer Centre M K Complex 71, Venkatesapuram Near Bank Of Baroda, Trichy Main Road.
9788788512

## EVERY 4TH SUNDAY

(4TH JANUARY)

**THIRUVALLUR (3-5:30)**
Gethsemane Prayer CenterH S R Tower,2nd Floor, Near CSI Gowdi Church 9488475315

**KRISHNAGIRI (3PM-5PM)**
Gethsemane Prayer center, Near Arun Hospital, Royakottai Road,
9962085523 | 9524999711

## MUMBAI (5PM - 8PM)

1st sunday - Dharavi
2nd Sunday- Bhandup
3rd Sunday - Malad
9004882470

இயேசு விடுவிக்கிறார்

**வாலிபர் உலகம்**

**சத்தியம்** TV சனிக்கிழமை 6:30am
7am **Youtube** மற்றும் **Comforter TV** யிலும் பார்க்கலாம்

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள், அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!

Sethiyam TV YouTube Comforter DIGITAL CHANNEL

# வாலிபர் உலகம் தொலைக்காட்சி ஊழியம்

இயேசுவை அறியாத வாலிபர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும் பொருட்டு, 2000ஆம் ஆண்டு முதல் வாலிபர் உலகம் என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி வாரந்தோறும் சனிக்கிழமை காலை 6:30 மணிக்கு சத்தியம் டி.வியில் ஒளிபரப்பப்பட்டு வருகிறது.சாட்சிகள், பாடல்கள், வாலிபர்களின் பிரச்சனைகளை தீர்க்கும் "உண்மையை தெரிஞ்சுக்கோ" என்னும் ஆலோசனை நிகழ்ச்சி, வாலிபர்கள் ஆரோக்கியத்தோடு வாழ Fitness Video, வாலிபர்களை நல்வழிப்படுத்தும் குறும்படங்கள், பள்ளிக் கல்லூரி மாணவர்களை நேரடியாக சென்று Interview எடுத்து அவர்களின் பிரச்சனைகளுக்கான தீர்வும் அதே நிகழ்ச்சியில் வழங்கப்படுகிறது. வாலிபர்களின் எதிர்காலத்தை சரியாக தேர்ந்தெடுக்க, வாழ்க்கையில் சாதித்த தொழிலதிபர்கள், வியாபாரிகள், கல்லூரி முதல்வர்கள் IT நிறுவன மேலாளர்கள் போன்றோரின் ஆலோசனை Career Guidance Video வாக வெளியிடப்படுகிறது. தொலைக்காட்சி நிகழ்ச்சியின் மூலமாக 2022 ஜனவரி முதல் அக்டோபர் வரை Youtube மூலமாக - 6 லட்சம் பேரும், Face book மூலமாக - 3 லட்சம் பேரும் பார்த்து பயனடைந்துள்ளனர். சத்தியம் டி.வியில் வாரந்தோறும் வரும் நிகழ்ச்சியின் மூலமாக 10 லட்சம் பேர் பார்த்து ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர்.

**கர்த்தர் நாமம் மகிமைப்படுவதாக!**












குறிப்பு: உங்களுடைய சாட்சிகளை 3 நிமிடத்தில் பேசி வீடியோவாக அல்லது எழுதியோ அனுப்பினால் உங்களை தொடர்பு கொள்வோம்.

# வட இந்தியா மற்றும் கிழக்கு இந்திய மாநில ஊழியங்கள்












கடந்த 2021 ஆம் ஆண்டு வட இந்தியா மற்றும் கிழக்கு இந்தியாவிலிருந்து எழுப்புதல் அக்கினியை பரவச் செய்வோர் முகாமில் சுமார் 1959 வாலிபர்கள் கலந்து கொண்டு, புதிய தரிசனத்தையும் தன பட்டணத்தைக் குறித்த பாரத்தையும் பெற்று சென்றனர். அவர்களுக்கு இந்த ஆண்டு பின்தொடர் பணி செய்ய தேவன் கிருபை செய்தார். ஜூலை மாதம் ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள 310 வாலிபர்களை உற்சாகப்படுத்தவும், தங்கள் பட்டணத்திற்காக மன்றாடி ஜெபிக்கவும், சீராக சுவிசேஷம் அறிவிக்க உற்சாகப்படுத்த தேவன் கிருபை செய்தார்.

அக்டோபர் மாதம் பஞ்சாப் ஹரியானா மாநிலங்களில் உள்ள 390 வாலிபர்களை கர்த்தருக்குள் பெலப்படுத்தவும், வரப்போகும் எழுப்புதலுக்காக தங்கள் பட்டணங்களை ஆயத்தப்படுத்தி அவர்களுக்கு புதிய பாரத்தை தேவன் கொடுத்தார்.

நவம்பர் மாதம் உத்திரகாண்ட், உத்திரபிரதேசம், டெல்லி, பீஹார், மேற்கு வங்காளம் மாநிலங்களில் உள்ள 607 வாலிபர்களையும் 125 போதகர்களையும் தங்கள் பட்டணங்களை சுதந்தரிக்கவும், போராடி ஜெபிக்கவும், சுவிசேஷ பணியில் அயராது உழைக்கவும் அவர்களை உற்சாகப்படுத்த தேவன் கிருபை செய்தார்.

இந்த பின்தொடர் பணியின் விளைவாக 305 ஜெபக்குழுக்கள் ஆரம்பித்து தங்கள் பட்டணத்தின் எழுப்புதலுக்காக ஜெபிக்க ஆரம்பித்துள்ளனர். இதுவரை 23,782 மணி நேரம் ஜெபித்துள்ளனர். மேலும் 2,526 வாலிபர்களுக்கு சுவிசேஷம் அறிவித்துள்ளனர். தேவனுக்கே மகிமை!







# 2022 ஆம் ஆண்டின் அறுவடை



ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி பிப்ரவரி மாதங்களில் தேர்வு எழுதும் மாணவர்களுக்கான கூடுகை (Achievers) நடைபெறும். இந்த ஆண்டும் நாலுமாவடி, வேலூர் மற்றும் மதுரையில் நடைபெற்றது. இதில் நூற்றுக்கணக்கானே மாணவர்கள் கலந்து கொண்டு தேர்வு பயங்கள் நீங்கி நம்பிக்கையுடன் தேர்வு எழுதி வெற்றிபெற்று சாட்சி சொன்னார்கள். வாலிபர் எழுப்புதல் ஜெபம் , நாலுமாவடி, திருப்பூர், சித்தூர், புத்தூர், மதுரை மற்றும் மும்பையில் நடைபெற்றது. இக்கூடுகையின் மூலமாக தமிழ்நாடு மற்றும் ஆந்திரா, மஹாராஷ்டிரா மாநிலங்களில் உள்ள வாலிபர்களை கர்த்தர் பக்கமாக திருப்ப தேவன் கிருபை செய்து வருகிறார்.அதுமட்டுமல்லாமல், சகோதரர் மோகன் சி. லாசரஸ் அவர்களுக்கு தேவன் கொடுத்த திட்டத்தின்படி அரசு வேலைக்கான TNPSC/ UPSC தேர்வு எழுதும் மாணவர்கள் சுமார் 2000 பேர் கலந்து கொண்டு தேர்வுக்கு, எப்படி ஆயத்தமாக வேண்டும், உயர்கல்வி வகுப்புகளில் இருக்கும் வாய்ப்புகள் மற்றும் உதவித்தொகைப் போன்றக் காரியங்களை விளக்கி மாணவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டி அனுப்ப தேவன் கிருபை செய்தார்.






2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை Achievers, வாலிபர் எழுப்புதல் ஜெபம், மவுண்ட் சினாய், உழைக்கும் கரங்கள் மற்றும் கிராம ஊழியம், கைப்பிரதி ஊழியம், பள்ளிகல்லூரிக் கூடுகை மூலமாக **7,93,303** பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், **3,18,351** மணி நேரங்கள் ஜெபிக்கவும் தேவன் கிருபை செய்தார்.








HAPPY
LABOUR DAY

# செய்திகள்!

## இந்தியாவில் ரூ.98,000 கோடியில் விமான நிலையங்களை மேம்படுத்த முடிவு: மத்திய அரசு தகவல்!



இந்தியாவில் அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.98,000 கோடி முதலீட்டு செலவில் தற்போதைய விமான நிலையங்களை மேம்படுத்தவும், புதிய விமான நிலையங்களை அமைக்கவும் இந்திய விமான நிலையங்கள் ஆணையம் மற்றும் இதர தனியார் விமான நிலைய செயற்பாட்டாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

விமானப் போக்குவரத்து வளர்ச்சியால் ஏற்பட்டுள்ள சவால்களை எதிர்கொள்ள விமான நிலையங்களில் உட்கட்டமைப்பை மேம்படுத்தும் பணிகளில் இந்திய விமான நிலையங்கள் ஆணையம் ஈடுபட்டு வருகிறது.

மேலும், விமான போக்குவரத்துத்துறை வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.98,000 கோடி முதலீட்டு செலவில் தற்போதைய விமான நிலையங்களை மேம்படுத்தவும், புதிய விமான நிலையங்களை அமைக்கவும் இந்திய விமான நிலையங்கள் ஆணையம் மற்றும் இதர தனியார் விமான நிலைய செயற்பாட்டாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

கடந்த 7 வருடங்களில் குஜராத்தில் தொலேரா, ஹிராசர், ஆந்திரப் பிரதேசத்தில் தாகதர்த்தி, போகபுரம், ஒரவக்கல், அருணாச்சலப்பிரதேசம் இட்டாநகரில் உள்ள டோன்யி போலோ ஆகிய 6 பசுமை விமான நிலையங்களை அமைப்பதற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இவற்றில் ஒரவக்கல் மற்றும் டோன்யி போலோ விமான நிலையங்கள் செயல்படத் தொடங்கியுள்ளன.

கோயம்புத்தூர் விமான நிலையத்தில் புதிய உள்நாட்டு முனையக் கட்டிடக் கட்டுமானம் மற்றும் அது சார்ந்த பணிகளுக்காக 146 கோடி ரூபாய் செலவிடப்பட்டு, பணிகள் நிறைவடைந்தன.

சென்னை விமான நிலையத்தின் இரண்டாவது முனையம் 1125.91 கோடி ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. திருச்சி விமான நிலையத்தில் புதிய முனையக் கட்டிடப்பணிகள் 710.35 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தூத்துக்குடி விமான நிலையத்தின் மேம்பாட்டுப் பணிகள் 46.24 கோடி ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன.

இந்தத் தகவலை மாநிலங்களவையில் விமானப் போக்குவரத்துத்துறை இணையமைச்சர் ஓய்வு பெற்ற ஜெனரல் வி.கே.சிங் எழுத்துபூர்வமாக தெரிவித்தார். – இந்து தமிழ் – டிசம்பர் 13, 2022.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

# வாலிபர் எழுப்புதல் கூடுகை

**பொள்ளாச்சியில்...**



நாள் : ஜனவரி மாதம் 8ஆம் தேதி
ஞாயிற்றுக்கிழமை,

நேரம்: மாலை 3 மணி முதல் 6 மணி வரை

இடம் : C.S.I. All Saints Church,
Parish Hall, Pollachi

செய்தியும் ஜெபமும் :

சகோ. **சாம் ஜெபராஜ்**

**பேர்ணாம்பட் மற்றும் ஆம்பூரில்...**

நாள் : ஜனவரி 2023, 22, சனிக்கிழமை

நேரம் : 1PM - 5PM

இடம் : எழுப்புதல் ஜெபக் கூடாரம்,
(இயேசு நேசிக்கிறார் ஜெபக்குழு)
வி. கே. ரோடு, பேர்ணாம்பட் , வேலூர் மாவட்டம்

செய்தியும் ஜெபமும் சகோ. **சதீஷ் குமார்**

தொடர்புக்கு: 9940854125 / 9597927799

**ஆந்திரா மாநிலம் புத்தூரில்...**

நாள் : பிப்ரவரி 2023, 11, சனிக்கிழமை

நேரம் : 6PM – 9PM

இடம் : Good Shepherd compound, புத்தூர்

செய்தியும் ஜெபமும் சகோ. **சதீஷ் குமார்**

தொடர்புக்கு: 8886739633

**தஞ்சாவூரில்...**

நாள் : பிப்ரவரி 2023, 18, சனிக்கிழமை நேரம் : 6pm – 6pm

இடம் : சி. எஸ். ஐ. செயிண்ட் பீட்டர்ஸ் சர்ச், பாரீஸ் ஹால்

செய்தியும் ஜெபமும் சகோ. **சதீஷ் குமார்**

தொடர்புக்கு : 9489775075



Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2020-2022.
Date of Publication: 25 – 12 -2022
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2020-2022.

# Achievers 2023

**தேர்வு எழுதும் மாணவர்களுக்கானக் கூடுகை**



## நாலுமாவடியில்...

இடம் : தேவனுடைய கூடாரம், நாலுமாவடி.
நாள் : ஜனவரி 26, வியாழக்கிழமை (குடியரசு தினம்)
நேரம் : மதியம் 1 மணி முதல் 4 மணி வரை
செய்தியும், ஜெபமும் : சகோ. மோகன் சி. லாசரஸ்
தொடர்புக்கு : 9442885315 / 9750955547



## வேலூரில்...

நாள் : ஜனவரி 2023, 22 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : 3PM – 6PM
இடம் : கெத்சமனே ஜெப மையம், அஜந்தா மஹால், கழிஞ்சூர் ரோடு காந்தி நகர் மேற்கு
செய்தியும் ஜெபமும் சகோ. சாம் ஜெபராஜ்
தொடர்புக்கு: 9442979556 / 9786379556

## தேனியில்...

நாள் : பிப்ரவரி 2023, 12 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : 2PM – 5PM
செய்தியும் ஜெபமும்: சகோ. அவினாஷ்
தொடர்புக்கு : 9750955548



## ஜெபமலையில்...

நாள் : பிப்ரவரி 2023, 05 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : 2PM – 5PM
இடம் : கீழமாதாபுரம், கடையம் ரோடு, ஜெபமலை
செய்தியும் ஜெபமும் : சகோ. அவினாஷ்
தொடர்புக்கு: 8270135303 / 9750955548



## பெரம்பலூரில்...

நாள் : பிப்ரவரி 2023, 05 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : 3PM – 6PM
செய்தியும் ஜெபமும் சகோ. சதீஷ் குமார்
இடம் : இயேசு விடுவிக்கிறார் கெத்சமனே ஜெப மையம், 71, M.K. காம்ப்ளக்ஸ் பேங்க் ஆப் பரோடா அருகில் வெங்கடேசபுரம்
தொடர்புக்கு 9788788512 / 9788812428

## திருச்சியில்...

நாள் : பிப்ரவரி 2023, 19 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : 3PM-6PM
செய்தியும் ஜெபமும் சகோ. சதீஷ் குமார்
தொடர்புக்கு : 9489775075

## ஆந்திரா மாநிலம் சித்தூரில் ...

நாள் : பிப்ரவரி 2023, 12 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : 6PM – 9PM
இடம் : இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகம் 2-1016, முதல் மாடி கமலாம்பாள் தெரு, Readspet, K.R. Palli, சித்தூர்
செய்தியும் ஜெபமும் சகோ. சதீஷ் குமார்
தொடர்புக்கு: 9487734603